# CONTENTS
## பொருளடக்கம்


1. Causes of Crime
   குற்றத்தின் காரணங்கள்

2. Types of Cimes
   குற்றத்தின் வகைகள்

3. Observation and collection of Criminal Intelligence
   குற்றக் கருத்துக்களை உற்று நோக்கித் திரட்டுதல்

4. Prevention of Crimes (Beat and patrol duty, surveillance and attendance at jail parades)
   குற்றங்களத் தடுத்தல் (பீட், ரோந்து, கண்காணிப்பு ஜெயில் பெரேடு).

5. Investigation
   புலன் விசாரணை

6. Juvenile delinquency
   முறை தவறிய சிறுவர்கள்

7. Maintenance of order, control of meetings, processions and crowds
   சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவதில் பொதுக்கூட்டம், ஊர்வலம் மற்றும் கூட்டம் முதலியன.

8. Festivals, fairs and village bazaars
   திருவிழாக்கள், சந்தைகள், கடைத்தெரு பாதுகாப்புப் பணி

9. V.I.P. Arrangements and securities
   முக்கியஸ்தர்களுக்குப் பாதுகாப்பும் அது தொடர்பான பணிகளும்

10 Guards and escorts
   கார்டும் எஸ்கார்டும்

11 Police Station routine and records
   காவல் நிலையத்தின் அன்றுடப் பணிகள்

12. Application of science and technology to police work
காவல் துறை பணியைப் பற்றிய அறிவியல் ரீதியான அறிவு

13 Emergency relief assistance in natural calamities
அவசர காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகள்

14 Fire prevention and fire fighting
தீ விபத்துக்களைத் தடுத்தலும் தீ பரவுதலைத் தடுத்தலும்

15 First –aid. Sanitation and hygine
முதல் உதவியும், சுத்தம் மற்றும் சுகாதாரமும்

காவலரின் கடமைகள்

# POLICE DUTIES

## 1. குற்றத்தின் காரணங்கள்
## CAUSES OF CRIME

சமுதயாத்தில் குற்றங்கள் ஏன் அதிகரிக்கின்றன என்பதற்குப் பொதுவான காரணங்கள் பல உண்டு

1. **மக்கள் தொகை அதிகரிப்பு**( Growth of population) :

மக்கட்த் தொகை பெருகப் பெருக உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை ஆகியவை குறைகிறது. குறைவான பொருட்களை நிறைய பேர் அடைய முயற்சி செய்யும்போது நிச்சயம் குற்றங்கள் பெருகும்.

### 2. கிராமத்திலிருந்து நகர்புறம் வருதல் (Urbanisation):

இடமாற்றம் செய்யும்போது வேலை கிடைக்காமல் போனாலும் போதிய சம்பளம் கிடைக்காமல் போனாலும் குற்றங்கள் பெருகும்..

### 3. செய்தித்தாள், சினிமா, தொலைக்காட்சி (Newspaper/ Cinema and Television):

இவை நடக்காத ஒன்றின் கற்பனை நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இதிலிருந்து போதுமான கருத்துக்கள் போதிக்கப்படுகின்றன. தவறான கருத்துக்கள் போதிக்கப்படும்போது குற்றங்கள் பெருகும்..

### 4. கல்வி முறையில் குறைகள் (Defects in educational system):

இன்றும் நம் நாட்டில் பள்ளிப்படிப்பும் கல்லூரிப் படிப்பும் ஏட்டுக் கல்வியாகவே இருக்கிறது. படித்தவுடன் வேலை கிடைக்காததாலும் இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதாலும் குற்றங்கள் பெருகும்.

### 5. சமுதாய, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் (Defects in social economics problems):

பிறப்பினால், சூழ்நிலைகளினால் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. நிறைவேறாத ஆசை காரணமாகக் குற்றம் புரிகின்றனர்.

### 6. பொருள் மீது ஆசையும், ஆன்மீக உணர்வுகள் அழிவும் (Lust for money and loss of moral control):

பணம் பாதாளம் மட்டும் பாயும் என்ற நம்பிக்கை நம்மிடையே வேரூன்றி விட்டது. நல்லது எது, கெட்டது எது என்று உணர்ந்து ஒழுக்கமாக நடந்து கொள்வது என்பது அரிதாகிவிட்டது.

### 7. அரசாங்கம் செயல்படும் தன்மை (Functioning of Government machinery):

பொது நிர்வாகம், காவல் துறை, நீதித்துறை, சிறைத் துறை திறமையற்று ஆமைபோல் செயல்படுவதால் சிலருக்கு தாமே அத்துமீறச் செயல்படத் தோன்றுகிறது.

## 2. குற்றத்தின் வகைகள்
## TYPES OF CRIMES

**குற்றங்கள் :-**

1. தனிநபருக்கெதிராகவும்
2. சொத்துகளுக்கெதிராகவும்
3. அரசுக்கெதிராகவும் செயல்படலாம்

### 1. தனிநபருக்கெதிரான குற்றம்:

தனிநபருக்கெதிரான ஒரு குற்றம் புரிகையில் அவனுடைய உயிருக்கோ, உறுப்புகளுக்கோ, உடைமைகளுக்கோ பங்கம் விளைவிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவருடைய உரிமைகள் பறிக்கப் பட்டிருக்கவேண்டும்.

### 2. சொத்துகளுக்கெதிரான குற்றம் :

சொத்துகளுக்கெதிரான விளைவிக்கப்படும் குற்றங்களில் சொத்துகளுக்கு சேதபங்கம் விளைவிக்கப்பட்டிருக்க வேண்டும். உதாரணமாக ஒரு நபரிடமிருந்து கைக் கடிகாரம் ஒன்று திருடப்படுகையில் அவர் தன்னுடைய உடமையை இழக்கிறுர்; அதே நேரத்தில் சொத்து விரயம் அவருக்கு உண்டாகிறது.

### 3. அரசுக்கெதிரான குற்றம் :

அரசுக்கெதிராக செய்யப்படும் குற்றங்களில் குற்றம் புரிந்தவரின் செய்கையால் அரசுக்குத் தீங்கு இழைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட மக்களை அரசுக்கெதிராக ஏவிவிடுதல் மற்றும் அரசினைக் கவிழ்ப்பதற்கு சதிசெய்தல் ஆகியவை இத்தகைய குற்றங்களில் அடங்கும். இத்தகைய குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்.

# 3. குற்றக் கருத்துக்களை உற்று நோக்கித் திரட்டுதல்
# OBSERVATION AND COLLECTION OF CRIMINAL INTELLIGENCE

ரோந்து அலுவலின்போது காவலர்கள் கீழ்க்கண்ட தகவல்களைச் சேகரிக்க வேண்டும்:

(அ) பழைய குற்றங்களில் புது தகவல்கள் ஏதேனும் கிடைக்கிறதா என்று விசாரிக்க வேண்டும். புதுக்குற்றங்களாக இருந்தால் குற்றவாளிகளையும் சொத்துக்களைப் பற்றியும் விசாரிப்பதுடன் தாக்கலாகாத குற்றமாக இருந்தால் வாதியை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். நடந்த குற்றங்கள் ஏதேனும் தாக்கல் செய்யப்படாமல் இருந்தால்,, எதனுல் தாக்கல் செய்யப்படவில்லை; யாரால் என்பதை விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

(ஆ) அலைந்து திரியக்கூடிய குற்றவாளிகள் எவரேனும் தங்கியுள்ளார்களா அல்லது அக்கிராமத்தின் வழியே சென்றிருக்கிறார்களா, அவர்களுடைய எண்ணிக்கை, வாழ்க்கை நடத்தும் முறை, அவர்களைப்பற்றிய புகார்கள் சந்தேகங்கள் இருந்தாலும் அவற்றை விசாரிக்க வேண்டும்.

(இ) சந்தேக நபர்கள் எவரேனும் வந்திருந்தால் எப்போது வந்தார் யாருடன் தொடர்பு கொண்டார், எங்கு தங்கினுர், அவர் வருகைக்குப்பின் ஏதேனும் குற்றம் நடந்ததா என்பதை விசாரிக்க வேண்டும். கிராம அதிகாரிகள் அத்தகைய நபர் பற்றிய பதிவேடு ஒன்றை பராமரித்து வருவார். காவலர்கள் அதனையும் பார்வையிடல் வேண்டும். சந்தேக நபர்களைச் சந்தித்தால் அவர்களுடைய முழு விவரமும் தெரிந்துகொள்ளும் பொருட்டு அனைத்து வினுக்களும் கேட்டு விடைகள் பெறவேண்டும்.

(ஈ) தெரிந்த குற்றவாளிகள் (K.D) மற்றும் சந்தேக நபர்கள் கிராமத்தில் வசிப்பவர்களுடைய வாழ்க்கையினைப் பற்றியும் ஆஜரில் இருக்கிறுர்களா அல்லது தலைமறைவாக இருக்கிறார்களா என்று விசாரிக்க வேண்டும். எவரிடமும் வேலை செய்து வந்தால் அதுபற்றிய விவரமும் அவரை சந்தேக நபர் எவரேனும் சந்திக்கிறுர்களா என்று கடைசியாக தணிக்கைக்குப்பின் அவருடைய நடவடிக்கை என்னவென்றும் தணிக்கை செய்ய வேண்டும்.

(உ) திருட்டுச் சொத்து எவரேனும் வாங்குகிறுர்களா, வாங்கிய பொருளின் விவரம், எவரிடமிருந்து எப்போது வாங்கியது மற்றும் எப்போது விற்கப்பட்டது என்றும் தகவல் சேகரிக்க வேண்டும்.

(ஊ) உரிமம் இல்லாமல் எவரேனும் துப்பாக்கிகள் வைத்திருக்கிறார்களா என்று விசாரிப்பதுடன் துப்பாக்கி கொண்டு செல்பவர்களிடம் சந்தேகம் இருந்தால் உரிமத்தைக் கேட்டுத் தகவல் தெரிந்துகொள்ளலாம்.

(எ) பொதுக்கூட்டமோ அல்லது பஞ்சாயத்தோ நடந்திருக்கிறதா அவ்வாறு நடந்திருந்தால் எதற்காக நடந்தது, சம்பந்தப்பட்டவர்கள் யார், முடிவு என்ன என்று விசாரிக்கவேண்டும்.

(ஏ) கிராமத்தில் கோஷ்டித் தகராறு இருக்கிறதா, அவ்வாறு இருந்தால், அதன் காரணம் மற்றும் அதனுடைய தற்போதைய நிலையை விசாரிக்க வேண்டும்.

(ஐ) கிராமத்தில் வன்முறைச் சம்பவங்கள் நிகழக்கூடிய சூழ்நிலை ஏதேனும் இருக்கிறதா, அவ்வாறு இருந்தால் அதற்குரிய காரணம், கோஷ்டிகளில் தலைவர்கள் பற்றிய தகவல்களை சேகரிக்க வேண்டும்.

(ஒ) கள்ளச்சாராயம் காய்ச்சுதலும் மற்றும் விற்பதும் பற்றிய தகவல் சேகரிப்பதுடன் சாராய வியாபாரி குற்றவாளிக்குப் புகலிடம் அளிக்கிறரா, திருட்டுச் சொத்து வாங்குகிறரா என்பதைப் பற்றியும் அறிய வேண்டும்.

## 4. குற்றங்களைத் தடுத்தல் (பீட், ரோந்து, கண்காணிப்பு ஜெயில் பெரேடு)

## PREVENTION OF CRIMES (BEAT AND PATROL DUTY/ SURVEILLANCE AND ATTENDANCE AT JAIL PARADE)

**குற்றங்களைத் தடுத்தல் :**

வெள்ளம் வருமுன் அணைபோடுதல் நல்லது என்பதை அறிவா் வந்தபின் வருந்துவதைவிட வருமுன் காப்பது விவேகமானது அல்லவா? குற்றங்களைத் தடுத்தல் என்பது காவல் துறையினா் செய்ய வேண்டிய முக்கிய கடமைகளுள் ஒன்று. குற்றங்கள் நடைபெறுவதைக் கீழ்க்கண்ட வழிகளில் தடுக்கலாம்.

1. பொதுமக்களுக்கு அறிவுரை கூறுதல்
2. ரோந்து செல்லுதல்
3. குற்றவாளிகள் மீது கண் வைத்தல்
4. தகவல் தருபவர்களைக் கொண்டு செய்தி சேர்த்தல்
5. குற்றம் செய்வர்கள் மீது ஜாமீன் நடவடிக்கைகள் எடுத்தல்
6. தடுப்புக் காவல் சட்டம் மற்றும் அமுலிலுள்ள சட்டத்தின்படி முன் கூட்டியே கைது செய்தல்

### பீட் (Beat):

பீட் என்பது ஒரு குறிப்பிட்ட பரப்பினைக் குறிக்கும். நகரத்தில் ஒரு சில தெருக்களும் கிராமப்புறக் காவல் நிலையங்களில் ஒரு சில கிராமங்களும் கொண்டது ஒரு 'பீட்' என்பதாகும்.

### ரோந்து (Patrol):

ரோந்து என்பது ஒரு காவல் நிலையத்தினா் செய்யும் அலுவலைக் குறிக்கும் இரயில்வே லைன் ரோந்து, சாலை ரோந்து ஒரு குறிப்பிட்ட வேலைக்காக அனுப்பப்படும் ரோந்து என்று பல வகைப்படும்.

பீட் என்ற சொல்லையும் ரோந்து என்ற சொல்லையும் ஒரே மாதிரியாகப் பயனபடுத்தினல் பீட் அனுப்புதல் என்பது சாதாரண அலுவல்களுக்காக அனுப்பப்படுவது என்று கொள்ளலாம். குற்றவாளிகளைப் பற்றி விசாரித்தல், தகவல் சேகரித்தல் போன்ற அலுவல்களை பீட் போகிறவர்கள் கவனிப்பார்கள். ‘ரோந்து’ என்பது ஒரு குறிப்பிட்ட வேலைக்காக அனுப்பப்படுவதாகும். கம்பித் திருட்டு நடப்பதைத் தவிர்க்க, இரயில்வே லைனில் நாக வேலையைத் தடுக்க சாலையில் வழிப்பறியைத் தடுக்க ரோந்து அனுப்புவது உண்டு.

## கண்காணிப்பு (Surveillance):

கெட்ட நடத்தைக்காரர்களைப்பற்றிய விவரங்களை ரகசிய முறையில் அவ்வப்போது அறியும் முறையே கண்காணிப்பாகும். ரோந்து காவலர்களின் முக்கிய பணிகளில் இதுவும் ஒன்ருகும். இது –

1. வழிமுறை கண்காணிப்பு
2. சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு என இரு வகைப்படும்.

## வழிமுறை கண்காணிப்பு :

இம்முறையில் காவல்துறையில் கீழ்க்கண்டவர்கள் கண்காணிக்கப் படுகிறுர்கள்.

1.வழக்கமான குற்றவாளிகள் (Habitual Offenders)
2. முகவரி தெரிவிக்க வேண்டிய நபர்கள் (Under Section 356 Cr.PC)
3. முன் தண்டனை பெற்ற குற்றவாளிகள் (Ex-Convicts)
4. டோசியர் குற்றவாளிகள் (D.C)
5. வேறுபட்ட மாநிலங்களில் குற்றம் புரியும் குற்றவாளிகள் (Inter-State Criminals)
6. இருப்புப்பாதை குற்றவாளிகள் (Railway Traffic Offenders)

## சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு :

நன்னடத்தையில் விடுவிக்கப்பட்டவர்கள் இம்முறையில் கண்காணிக்கப்படுகிறார்கள்.

# 5. புலன் விசாரணை (INVESTIGATION)

## குற்றத்தைப் பதிவு செய்தல் (Registration of crime):

குற்றவிசாரணை முறைச்சட்டம் பிரிவு - 154-ன்படி பிடிக்கக்கூடிய குற்றம் தொடர்பான முதற் செய்தியை காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு கொடுக்கப்படும்போது அதனை அவர் முதல் தகவல் அறிக்கையாக தயார் செய்கிறார். காவல் நிலைய பொறுப்பு அலுவலர் (S.H.O) காவல் நிலையத்தில் இல்லாதபோது தலைமை காவலரோ, காவலரோ நிலையப் பொறுப்பு அதிகாரியாக இருக்கும்போது குற்ற

விசாரணை முறைச் சட்டம் பிரிவு - 2 (O)- ன்படி முதல் தகவல் அறிக்கையை தயார் செய்யலாம். அவ்வறிக்கையை தாமதம் இன்றி தொடர்புடைய குற்றவியல் நீதிபதிக்கும், மேலதிகாரிகளுக்கும், குற்றப்பதிவேடு கூடத்திற்கும், வாதிக்கும் நகல்கள் அனுப்பப்படுகிறது.

## அறிவியல் வாயிலாக புலன் விசாரணை செய்வதில் ஆரம்ப அறிவு (Elementary knowledge of scientific adis to investigation):

அறிவியல் வாயிலாகக் குற்றங்களைப் புலனாய்வு செய்வது, குற்றவாளிகளைக் குற்றத்துடன் உறுதியாக இணைப்பதற்கு, மிகுந்த துணையாக உள்ளது. அறிவியல் முறையில் கண்டுபிடிக்கப்படும் உண்மைகள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவையாகும்.

குற்றங்களை அறிவியல் முறையில் கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியம்

1. சமுதாய வளர்ச்சி
2. போக்குவரத்து வளர்ச்சி
3. சாதாரண மனிதனின் அறிவாற்றல் வளர்ச்சி
4. குற்றம் புரிவற்குரிய சூழ்நிலைகள்

அறிவியல் முறையில் குற்றங்கள் கீழ்க்கண்ட தத்துவங்களைப் பயன்படுத்தியே கண்டுபிடிக்கப்படுகின்றன.

1. பொருட்களின் தன்மை
2. பொருட்களின் பரிமாற்ற விதி
3. பொருட்களின் மாறும் தன்மை
4. பொருட்களின் ஒப்பிடும் தன்மை

### 1. பொருட்களின் தன்மை:

ஒவ்வொரு பொருளுக்கென்று தனித்தன்மையும் குணதிசயங்களும் உண்டு. ஒன்றில் காணப்படுவது மற்றதில் காணப்படாது.

### 2. பொருட்களின் பரிமாற்ற விதி:

இரண்டு பொருட்கள் ஒன்றேடொன்று தொடர்பு கொள்ளும்போது ஒரு பொருளிலிருந்து மற்றதற்குப் பரிமாற்றம் உண்டாகின்றது. இவ்விதியைக் கண்டறிந்தவர் பிரான்சு நாட்டு விஞ்ஞானி சர். எட்மண்ட லோகார்டு என்பவர். இவ்விதியின்படி, குற்றவாளி, குற்றம் புரிவதற்கு ஒரு இடத்திற்குச் செல்கையில் தனக்குத் தெரியாமல் சில தடயங்களைக் குற்றம் செய்யும் இடத்தில் விட்டு விடுகிறான். அதே நேரத்தில் சில தடயங்களைக் குற்ற இடத்திலிருந்து தனக்கு தெரியாமல் எடுத்துச் சென்று விடுகிறான். அத்தகைய தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் குற்றவாளியையும், குற்றத்தையும் எளிதில் இணைத்துவிடலாம்.

### 3. பொருட்களின் மாறும் தன்மை:

காலத்துடன் பொருட்களின் தன்மை குணதிசயங்களில் மாறுதல் ஏற்படுகிறது. ஆனால் பொருளுக்குத் தகுந்தவாறு, இம்மாற்றம் உண்டாகிறது. குற்றவாளியின் உருவத்திலும், குற்ற இடத்திலும் சம்பந்தப்பட்ட தடயங்களின் மாறுதல் உண்டாகிவிடும்.

எனவே குற்ற இடத்திற்கு உடன் சென்று தடயங்களைச் சேகரிக்க வேண்டும். குற்றவாளி உடன் கைது செய்யப்படாவிடில் அவருடைய உருவத்தில் மாறுதல் உண்டாகிறது. அங்கு

காணப்படும் தடயங்களாகிய விரல் ரேகைள் மற்றும் கால் தடயங்களில் மாறுதல் உண்டாகி அழிந்துவிடும்.

### 4. பொருட்களின் ஒப்பிடும் தன்மை:

ஒத்த பொருட்களையே ஒப்பிட முடியும். எனவே பொருட்களை ஒப்பிடுவதற்கு ஆய்வுக் கூடத்திற்கு அனுப்புகையில் ஒத்த பொருட்களையே அனுப்பவேண்டும்(உ–ம்) குற்ற இடத்தில், நரைத்த தலைமுடி காணப்பட்டால் அதனுடன் ஒப்பிடுவதற்கு நரைத்த தலை முடியையே அனுப்ப வேண்டும். கருத்த முடியை அனுப்புவதால் எந்தப் பயனும் கிட்டாது.

## குற்ற இடத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியமும் கவனிக்க வேண்டிய முறைகளும் (Scene of Crime – preservation):

குற்ற இடத்தில், குற்றவாளி குற்றம் புரிகையில் தனக்குத் தெரியாமல் சில தடயங்களை பொருட்களின் விதிப்படி எடுத்துச் செல்வதால் அங்கு காணப்படும் தடயங்களைப் பரிசீலனை செய்து அதன்மூலம் கிடைக்கும் சாட்சியங்களைப் கைப்பற்றி தடயங்கள் இயற்கையாலும் அழிந்து விடுவதற்கு ஏது உண்டு. எனவே குற்றம் காவல் நிலையத்தில் தாக்கலானதும் காவல் நிலைய அதிகாரி, காலம் கடத்தாது விரைந்து சென்று தடயங்களைச் சேகரிக்க வேண்டும். குற்ற இடத்திற்கு, பாதுகாவல் அலுவலுக்குச் செல்லும் காவலா் அங்குள் தடயங்களை அழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்நியா்கள் எவரும் தடயங்களை எடுத்துச் செல்லாமலோ, அழித்து விடாமலோ பாதுகாக்க வேண்டும். கைரேகை நிபுணா், அறிவியல் ஆய்வுக்கூட நிபுணா் புகைப்படக்காரா் ஆகியவா் குற்ற இடத்திற்கு வந்து தங்களுடைய கடமைகளைச் செய்து முடிக்கின்ற வரையில், கவனமாக பாதுகாக்க வேண்டும். சில நேரங்களில் குற்றவாளியே குற்றம் புரிந்தபின் புலன் விசாரணை காலத்தில் அருகிலேயே இருந்து, தான் விட்டுச் சென்ற தடயங்களை அழிப்பதற்கும் முயற்சி செய்வான். ஏனவே குற்ற இடத்தைப் பாதுகாக்கச் செல்லும் காவலா்கள் கீழக்கண்ட அலுவல்களைச் செய்ய வேண்டும்.

1. குற்ற இடத்திலுள்ள தடயங்களை எவரேனும் கையாளுவதற்கு அனுமதிக்கலாகாது. தானும் ஆர்வமிகுதியால் எப்பொருளையும் கையாளக்கூடாது.

2. அந்நியா்களைக் குற்ற இடத்திற்கு அனுமதிக்கக்கூடாது.

3. குற்றத்துடன் தொடா்புடையவா்களை, அங்கிருந்து செல்வதற்கு அனுமதிக்க இயலாது.

4. இயற்கையின் விளைவால், அதாவது மழை போன்ற செயல்களினால் தடயங்களுக்கு ஊறு எதுவும் விளையாமல், பாதுகாக்க வேண்டும்.

5. காவலா்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட அலுவலையே செய்ய வேண்டும். குற்ற இடத்தில் காணப்படும் சாட்சியங்களை சேகரிக்கப்படும் வரையில் குற்ற இடத்தில் காணப்படும் சாட்சியங்கள் சேகரிக்கப்டும் வரையில் குற்ற ஜாகாவை, காவலா்கள் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டும், புலன் விசாரணை அதிகாரியின் அறிவுரையை கேட்டு கொடுத்த அலுவலைச் செவ்வனே செய்து முடிக்க வேண்டும்.

## ஆஜர் கட்டளையை சார்வு செய்யும் விதமும், பிடிக்கட்டளையை நிறை வேற்றும் முறையும் (Service of summons and execution of warrants):

**ஆஜர் கட்டளையை சார்வு செய்யும் முறைகள்:**

1. நேரில் சார்வு செய்தல் (Section 62 (2) Cr.PC)
2. பிறர் மூலம் சார்வு செய்தல் (Section 64 Cr.PC)
3. ஒட்டி சார்வு செய்தல் (Section 65 Cr.PC)
4. நிறுவனங்களில் மேலாளர் மூலம் சார்வு செய்தல் (Section63 Cr.PC)
5. அரசு ஊழியர்களுக்கு அந்த அலுவலகத்தில் மூலம் சார்வு செய்தல் (Section 66 Cr.PC)
6. நீதிமன்ற வட்டார வரம்புக்கு வெளியே சார்வு செய்தல் (Section 67 Cr.PC)
7. அஞ்சல் மூலம் சார்வு செய்தல் (Section 69 Cr.PC)

**பிடிக்கட்டளையை நிறைவேற்றும் முறை:**

**பிடிக்கட்டளை இரண்டு வகைப்படும்:**

1. ஜாமீனில் விடக்கூடிய பிடிக்கட்டளை
2. ஜாமீனில் விடக் கூடாத பிடிக்கட்டளை

**பிடிக்கட்டளை யாரால் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது:**

பிடிக்கட்டளையை சாதாரணமாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காவல் அலுவலராலும், பிடிக்கட்டளையை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று அப்போது காவல் அலுவலர் யாரும் கிடைக்கவில்லையாயின் வேறு எந்த நபராலும் அல்லது நபர்களாலும் நிறைவேற்றும்படி உத்தரவிடலாம். காவல் அலுவலருக்கு பிடிக்கட்டளையை நிறைவேற்றும்படி நீதிமன்றம் உத்தரவிட்டால் அந்தப் பிடிக்கட்டளையில் உத்தரவிடப்பட்ட காவல் அலுவலராலோ அல்லது அவரின் உத்தரவின் பேரில் வேறு காவல் அலுவலரோ அதை நிறைவேற்றலாம். ஒரு பிடிக்கட்டளையை ஒன்றுக்கு மேற்பட்ட அலுவலாகள் நிறைவேற்றும்படி உத்தரவு கொடுக்கப்பட்டால் அதில் குறிப்பிட்ட காவல் அலுவலர்களில் ஒருவரோ அல்லது மற்றவர்களுடன் சேர்ந்தோ அந்த நபரைக் கைது செய்து பிடிக்கட்டளையை நிறைவேற்றலாம்.

## பரிசோதனை செய்தல், கைப்பற்றுதல், கைது செய்தல், விசாரணை செய்தல் மற்றும் திடீர் சோதனையின்போது உதவி புரிதல்
(Assitance in raids/ search seizure and arrests and interrogation)

### சோதனை மற்றும் திடீர் சோதனை (Search and raids)

சோதனை, கைப்பற்றுதல், கைதுசெய்தல், வினவுதல் ஆகியவற்றில் காவலரின் கடமைகள்:

### 1. திடீர் சோதனை (**Raids**):

மதுவிலக்கு, கடத்தல் போன்ற குற்றங்களில் குற்றவாளியைப் பிடிக்க காவல் நிலைய அதிகாரியுடன் திடீர் சோதனை செய்ய காவலர்கள் செல்ல வேண்டும். அச்சந்தர்பங்களில் அதிகாரிகளுக்கு உறுதுணையாக இருந்து ஆணையின்படி குற்றவாளிகளைப் பிடிக்கவும் பொருட்களைக் கைப்பற்றிவும் உதவி புரிய வேண்டும்.

### 2. சோதனை (**Search**):

சந்தேக நபரைக் கைது செய்து அவர் திருட்டுச் சொத்து அல்லது ஆபத்தான ஆயுதம் ஏதேனும் வைத்திருக்கிறாரா என்று சோதனை செய்ய வேண்டும். அவ்வாறுக சோதனை செய்யும்போது கவனத்துடன் தலைமுடியிலிருந்து கால்வரை சோதனை செய்ய வேண்டும். அதிகாரிகளுடன் வீடு போன்ற இடங்களில் சோதனை செய்யச் செல்லும்போது அதிகாரிகளின் ஆணைக்கேற்ப தேடும் இடங்களுக்கு வெளியிலும், உள்ளும் காவலாக நின்று முறையான ஒரு வகையில் சோதனை செய்ய வேண்டும். ஆர்வத்தின் பேரில் கண்ட பொருட்களைத் தொட்டு சாட்சியங்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடாது. அவ்வாறு தேடும் இடத்தில் பெண்கள் இருந்தால் அவர்களை வேறு இடத்திற்கு அனுப்பி விட்டுச் சோதனை செய்ய வேண்டும்.

### 3. கைப்பற்றுதல் (**Seizure**):

சந்தேக நபரை, குற்றவாளியைக் கைது செய்து காவலர்கள் உடல் பரிசோதனை செய்து ஆபத்தான ஆயுதம் இருந்தாலும் அல்லது குற்றம் தொடர்பான திருட்டுச் சொத்து வைத்திருந்தாலும் கைப்பற்ற வேண்டும். வீட்டைச் சோதனை இடுகையில் குற்றம் தொடர்பான பொருட்களையும் மற்றும் சாட்சியப் பொருட்களையும் கைப்பற்றி நல்ல முறையில் பேக் செய்து நீதி மன்றத்திற்கு அனுப்ப உதவி செய்ய வேண்டும்.

### 4. வினவுதல் (Interrogation):

குற்றவாளிகளையோ, சாட்சிகளையோ பாதிக்கப்பட்டவரையோ அல்லது தகவல் சொல்பவரையோ, விசாரணை செய்யும் போது காவலர்கள் குறுக்கீடு செய்யாமல் தொடர்பான பலன்தரக் கூடிய கேள்விகளை எழுப்பி விடை பெறுவதற்கு உதவிபுரிய வேண்டும்.

## 6. முறை தவறிய சிறுவர்கள் JUVENILE DELINQUENCY

முறை தவறிய சிறுவர்கள் எனப்படுவர் ஒரு குற்றத்ததைச் செய்தாலும் அல்லது செய்ய எத்தனித்தாலும் குற்றம் சாட்டப்பட்ட சிறுவன் என கருதப்படுவான். சிறுவர் (Juvenile) எனப்படுபவர் பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவனும், பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறுமியும், சிறுவர் என அழைக்கப்படுவார்.

## Section 2 (4) Juvenile Justice Act. 1986

1986-க்கு முன் சிறுவர்களுக்கு சிறுவர்ச் சட்டம் என தனிச் சட்டம் இருந்தது. அது 1986-ஆம் ஆண்டு சிறுவர் சீர்த்திருத்தச் சட்டம் என மாற்றியமைக்கப்

பட்டது. இச்சட்டம் சிறுவர்களை பாதுகாக்கவும் சிறுவர்கள் மீது கவனம் செலுத்தவும், சிறுவர்களை முன்னேற்றவும் மற்றுமம் புறக்கணிக்கப்பட்ட அல்லது குற்றம் புரிந்த சிறுவர்களை நல்வழிப்படுத்தவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. இக்குற்றம் புரிகிற சிறுவர்களை சீர்திருத்துவதற்காக தனி நீதி மன்றங்களும் பாதுகாப்பு இல்லங்களும், சிறப்பு இல்லங்களும் அமைக்க அரசு வகை செய்து உள்ளது. சிறுவருடைய வழக்குகளைப் பற்றி பத்திரிக்கையில் விளம்பரம் செய்யக்கூடாது என்றும் சிறப்புச் சட்டங்கள் போடப்பட்டுள்ளன (Section 36 of Juvenile Justice Act, 1986) மேலும் சிறுவர்களைப் பிச்சையெடுக்கும் வேலைக்கும் மற்ற கொத்தடிமைகள் போல் ஆக்குவோர்களையும் கடுமையாக தண்டிக்க இச்சட்டம் வகை செய்கிறது. சிறுவர்களைச் சீர்த்திருத்தம் செய்ய பெற்றோர்களும் உயர் அதிகாரிகளை கொண்ட ஆலோசனைக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

## 7. சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் பொதுக்கூட்டம், ஊர்வலம் மற்றும் கூட்டம் முதலியன

## MAINTENANCE OF ORDER/ CONTROL OF MEETINGS, PROCESSIONS AND CROWDS

### ஒழுங்கற்ற கூட்டத்துடன் நடந்து கொள்ளும் விதம் (How to deal with a mob to control it):

ஒழுங்கற்ற கூட்டம் எந்தச் சந்தர்ப்பத்திலும் உண்டாகலாம். அவற்றைக் கட்டுப்படுத்துதல் காவலர்களின் கடமையாகும், ஒழுங்கற்ற கூட்டத்திலே அங்கம் வகிப்பவர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்று தெரியாத நிலையிலே தன்னிச்சையாகச் செயல்படுவார்கள். அவர்கள் கட்டுப்படுத்துவதற்கு கீழ்க்கண்டவாறு காவலர்கள் பணிபுரியவேண்டும்.

1. கூட்டத்தினரிடம் அனுவசியமாகப் பேசலாகாது. அநாகரிகமான சொற்களையும் பயன்படுத்தலாகாது.
2. கூட்டத்தினரின் மனநிலையை அறிந்து செயல்பட வேண்டும்
3. கூட்டத்தினரிடையே தனியாக எந்தக் காவலரும் செல்லக்கூடாது.
4. அதிக காவலர்கள் தேவைப்பட்டால் நிலைய அதிகாரிக்குத் தகவல் கொடுத்து காவலர்கள் வரும்வரை நிலைமைச் சமாளிக்க வேண்டும்.
5. அதிகாரிகளின் ஆணைக்குட்பட்டுச் செயல்பட வேண்டும்.
6. கூட்டத்தினரைக் கலைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் குறைந்த சக்தியையே (minimum force) பயன்படுத்திக் கலைக்க வேண்டும்.
7. காயமடைந்த நபர்களை உடனடியாக நிலையத்திற்கு அனுப்பி மருத்துவ சிகிச்சை அளிக்க ஆவன செய்ய வேண்டும்.

**பொதுக் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் ஒழுங்குபடுத்தும் முறை**

**பொதுக்கூட்டம்:**

பொதுக் கூட்டங்களில் பணிபுரிய அனுப்பப்படும் காவலர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அலுவல்களைச் சரிவர செய்து கூட்டத்தினரைக் கட்டுப்படுத்த வேண்டும். பொதுக் கூட்டத்தில் பணிபுரியும் காவலர் கீழ்க்கண்ட முறைகளில் பணிபுரிய வேண்டும்

1. கூட்டத்தினர் அமைதியாக அமர்ந்து கூட்டத்தைக் கவனிக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
2. குறிப்பிட்ட இடத்தில் நெரிசல் அதிகமாகி அதனால் அசம்பாவிதம் ஏதாவது நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
3. அருகிலுள்ள மரங்கள், கூரைகள் இவைகள் மீது எவரும் ஏறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
4. பேச்சாளருக்கு எவரும் தீங்கு விளைவிக்காத வகையில் கண்காணித்துக் கொள்ள வேண்டும்.
5. பேச்சுகளைக் கேட்டு உணர்ச்சிவசப் படக்கூடாது, சொந்த விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்தக்கூடாது.
6. பார்வையாளர்களில் எவரேனும் உணர்ச்சிவசப்பட்டால் அவரை ஆசுவாசப்படுத்தி கூட்டத்திலிருந்து வெளிப்படுத்த வேண்டும். கூட்டத்தினரால் அவருக்குத் தீங்கு ஏதும் நேராமல் பாதுகாக்க வேண்டும்.
7. ஒலிபெருக்கி, மின்விளக்குகள் கட்டப்பட்டுள்ள கம்பங்களுக்குச் சேதம் விளைவிக்காமல் அருகில் யாரும் அமராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**ஊர்வலங்கள்**

ஊர்வலம் செல்கையில் காவலர்கள் ஊர்வலத்தில் தொடர்ந்து செல்வதற்கும் ஊர்வலம் கடந்து செல்லும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு அலுவலுக்கும் நியமிக்கப்படுவார்கள். ஊர்வலப்பணிகளில் நியமிக்கப்படும் காவலர்கள் கீழ்க்கண்ட முறையில் பணிபுரிய வேண்டும்.

1. சுத்தமான உடுப்பு, அறை லத்தி சகிதம் செல்லவேண்டும்.
2. ஊர்வலத்தில் செல்கையில் ஊர்வலத்தில் பங்கு பெறுபவர்களிடம் அனாவசியமாகப் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ள கூடாது.
3. ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படும் கோஷம் உள்ள அட்டைகளைப் பார்த்து கருத்துத் தெரிவிக்கக்கூடாது.
4. ஊர்வலத்தில் கலந்து கொள்வோருக்கு அக்கம் பக்கத்திலிருந்து தீங்கு நேராவண்ணம் பாதுகாக்க வேண்டும்.
5. லத்திகளைத் தங்கள் தோளில் மாட்டிக் கொள்ள வேண்டும். கூட்டத்தினரை நோக்கி வீசக் கூடாது.
6. ஊர்வலம் செல்கின்ற நேரத்தில் எதிர்படுகின்ற போக்குவரத்துகளை ஓரத்தில் நிறுத்தி ஊர்வலம் தடையின்றிச் செல்ல வழி செய்ய வேண்டும்.
7. விலங்கினங்கள் ஊர்வலத்தில் நுழையா வண்ணம் பாதுகாக்க வேண்டும்
8. அசம்பாவிதம் நடைபெற்றால் உடன் உயர் அதிகாரிக்குத் தெரிவித்து அதன்படி நடந்துகொள்ளவேண்டும்.
9. ஊர்வலம் முடிந்தவுடன் அறிவுரைப்படி குறிப்பிட்ட அதிகாரியிடம் அறிக்கை செய்து கொண்டு ஆணைப்படி நடந்து கொள்ள வேண்டும்.
10. ஊர்வல நடவடிக்கைகளைக் கவனிக்க சாதாரண உடையில் அனுப்பப்படும் காவலர்கள் ஊர்வலத்தைத் துவக்கியவர் பெயர், தலைமை தாங்குபவர் பெயர், ஊர்வலத்தினரின் எண்ணிக்கை, எழுப்பப்படும் கோஷங்கள், விநியோகிக்கப்படும் பிரசுரங்கள் ஆகிய விவரங்களைக் கூட்டத்தினருக்குத் தெரியாத முறையில் சேகரித்து மேலதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

# 8. திருவிழாக்கள், சந்தைகள், கடைத்தெரு பாதுகாப்புப் பணி
# FESTIVAL/ FAIRS AND VILLAGE BAZAARS

சந்தைகள், திருவிழாக்கள் மற்றும் கடைத்தெரு ஆகிய இடங்களில் மக்கள் அதிக அளவில் கூடுகின்ற இடத்திலே கூட்டத்தினர் மற்றும் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தவும், கூட்டத்தினரைக் கட்டுப்பாட்டில் வைத்து அசம்பாவிதம் நிகழாமல் பாதுகாக்கவும் காவலர்கள் அனுப்பப்படுகிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும் பணியில் செல்பவர்கள் தங்கள் குடும்பத்துடன் செல்லக்கூடாது. தங்களுடைய ஓய்வு நேரத்தின் போது எக்காரணத்தைக் கொண்டும் உடுப்பைப் போட்டுக் கொண்டு கண்டபடி சுற்றலாகாது. ஓரிடத்தில் கூடுமாறு “விசில்” சத்தம் கேட்டால் அவ்விடத்தில் உடனே கூட வேண்டும்.

இத்தகைய அலுவல்களுக்கு அனுப்பப்படுவர்கள் செய்யவேண்டிய பணிகளாவன.

1. சுகாதார வசதிகள் போதுமான அளவில் நிர்மாணிக்கப்படுகிறதா என்றும், ஒழுங்கீனங்கள் ஏதாவது நடக்கிறதா என்றும் கவனிக்க வேண்டும்.
2. பெரியம்மை, காலரா போன்ற தொற்று நோய்களைப் பற்றி உடனுக்குடன் மருத்துவ அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.
3. காலரா போன்ற தொற்று நோய்கள் உண்டாகும் நேரத்தில் மருத்துவமனைகளைப் பற்றிய விவரங்களைப் பொது மக்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும்.
4. தடை செய்யப்பட்ட இடங்களிலிருந்து மக்கள் நீர் எடுத்துப் பருகாமல் கவனிக்க வேண்டும்.
5. வண்டிகள் நிறுத்தப்பட்டுள்ள இடம் சுத்தமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்
6. குற்றம் நடவாமல் பாதுகாப்பதுடன் தெரிந்த குற்ற கணத்தவர்கள் கூட்டத்தினிடையே காணப்பட்டால் கண்ணோக்கம் வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.
7. காணமல் போன குழந்தைகளையும் மற்றும் சொத்துக்கள் பற்றிய விவரங்களையும் உடனுக்குடன் “May I help you squad” –ல் பணி புரிவோர்களுக்குத் தெரிவித்து ஒலி பெருக்கி மூலம் தெரிவிக்க வேண்டும்.
8. விபத்து நடைபெறுகின்றபோது காயமடைந்த நபரை அருகாமையில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.
9. திருவிழாப் பணிகளில் உள்ள காவலர்கள் ஆலயங்கள் அருகே ஒழுங்கீனம் நடைபெறுமல் பாதுகாக்க வேண்டும்.

கண்காட்சி, சந்தைகள், திருவிழாக்கள் ஆகியவை நடைபெறுகிற காலத்தில் காவல் துறையினரால் அங்கு புறக்காவல் நிலையமோ, தற்காலிய புறக்காவல் நிலையமோ அல்லது “ நாம் உங்களுக்கு உதவ வேண்டுமா” என்ற வாசகம் உள்ள பட்டையைக் கட்டியிருப்பார்கள். காணமல் போன குழந்தைகள், சொத்துக்கள், தவறி விட்ட பண்ட பாத்திரங்கள் மற்றும் இதர பொருட்களை அவ்வப்போது பணியில் உள்ள காவலர்கள் இந்த அணியிடம் ஒப்புவிக்க வேண்டும். அவர்கள் இத்தகவலை ஒலி பெருக்கி வழியாக அறிவித்து காணமற்போன குழந்தைகளது பெற்றோர்களையும், சொத்தையும் உரிமையாளர்களிடம் சேர்ப்பார்கள். குற்றம் புரிந்து, பிடிக்கப்பட்டு

தங்களிடம் ஒப்புவிக்கப் பட்ட குற்றவாளிகளை உடனுக்குடன் அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

## 9. முக்கியஸ்தர்களுக்குப் பாதுகாப்பும் அது தொடர்பான பணிகளும்
## V.I.P ARRANGEMENTS AND SECURITIES

முக்கிய நபர்களாகிய நம் நாட்டுக் குடியரசுத் தலைவர், உதவி குடியரசுத் தலைவர், பிரதம மந்திர, அயல்நாட்டு முக்கியஸ்தர்கள், முதல் மந்திர, இதர அமைச்சர்கள் ஒரு நிலைய எல்லைக்குள்ளே விழாக்களில் பங்கு பெறுகையிலும் சாலை வழியே செல்கிற போதும் அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு கொடுத்து அவர்கள் கலந்து கொள்ளும் விழா நல்ல முறையில் நடக்குமாறு கவனித்துக் கொள்வது காவல் துறையின் தலையாய கடமையாகும்.

முக்கிய நபர்கள் தங்குகிற இடத்தருகே காவலில் நியமிக்கப்படும் காவலர்கள் அங்கு வந்து செல்கின்ற நபர்களின் மீது கண்ணோக்கம் வைக்க வேண்டும். ஆயுதங்கள் எவையேனும் கொண்டு வந்தால் அவர்களை நிறுத்தி விசாரித்து உடனடியாக மேலதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

முக்கிய நபர்கள் சாலை வழியே வாகனங்களில் செல்லும் போது அதற்கான பணிகளில் நியமிக்கப்படுபவர்கள்,-

கூட்டத்தினரைப் பார்த்து நிற்க வேண்டும். முக்கிய நபர் வருகின்ற வருகையைக் குறித்து முன்னல் வருகிற அட்வான்ஸ் பைலட் வாகனத்தைப் பார்வையிட்டதும் லாரிகள், கார்கள் ஆகியவற்றை சாலையின் இடது பக்க ஓரத்தில் நிறுத்தச் செய்து இஞ்சினை நிறுத்தி வாகன ஓட்டியை கீழே இறங்கி நிற்கச் செய்ய வேண்டும். முக்கிய நபர் "கார்" தன்னைக் கடந்து சென்றதும் அங்குள்ள கூட்டம் கலையும்வரை அவ்விடத்தில் பணிபுரிந்து, பின்னர் நிலையம் திரும்ப வேண்டும்.

முக்கிய நபர்கள் கலந்து கொள்ளும் விழாக்களிலும் பொதுக்கூட்டங்களிலும் பணிபுரிய நியமிக்கப்படும் காவலர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணியைத்தான் செய்ய வேண்டும். கூட்டம நடைபெறுகையில் மக்களில் எவரேனும் உணர்ச்சிவசப்பட்டால் அவரை அப்புறப்படுத்துவதுடன அவருக்குப் பிற நபர்களால் தீங்கு நேராவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். கூட்டம் முடிவடைந்ததும் மக்கள் கலையும்வரை பணிபுரிந்து அதிகாரியிடம் அறிக்கை ஒன்றை செய்து நிலையம் திரும்ப வேண்டும்.

## 10. கார்டும் எஸ்கார்டும்
## GUARDS AND ESCORTS

காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை, கைதிகளை காவல் செய்வதற்கும், காவல் நிலையத்தைக் காப்பதற்கும் காவல் நிலையத்தில் யாரும் இல்லாத போது செய்திகளைப் பெறுவதற்கும் மற்றும் பொருட்கள், ஆயுதங்கள் ஆகியவற்றைக் காப்பதற்கும், பொதுவாக நான்கு (4) மணி நேரத்திற்கு ஒரு காவலர் பாராக் காவலராக (Sentry P.C.) கார்டு அதிகாரியால் நியமிக்கப்படுகிறார்.

1. காவல் நிலையத்திலுள்ள சொத்துக்களையும் மற்றும் தற்காலிகமாக வைக்கப்பட்ட சொத்துக்களையும் பாரா புத்தகத்தில் பதிவு செய்து காக்க வேண்டும்.
2. காவல் நிலையத்தில் சுவரில் அல்லது தரையில் பதிக்கப்பட்டு வைக்கப்பட்ட பணப்பெட்டி (அ) அவ்வாறு வைக்கப்படாத பணப்பெட்டடியையும் பாதுகாவல் செய்ய வேண்டும். பாரா மாற்றும்போது இதனைக் கவனித்து பாரா புத்தகத்தில் எழுதி ஒப்படைக்க வேண்டும்.
3. ஆயுதங்கள், தோட்டாக்களையும் பாராக் காவலரிடம் ஒப்புவித்து பாரா மாற்றுப் புத்தகத்தில் பாராக் காவலரின் கையெழுத்துப் பெறுதல் அவசியமாகும்.
4. கைதிகள் காவலிலிருப்பார்களேயானுல் அதற்கு வழக்கமான கார்டு நியமனம் செய்தல் வேண்டும்.
5. பாரா மாற்றப்படுமுன் பாரா கொடுக்கும் காவலருடன் கட்டிடத்தை சுற்றி வந்து இரவில் லாந்தர் வெளிச்சத்துடன் ஒவ்வொரு கதவி, ஜன்னல், தாழ்ப்பாள், பூட்டு, கீல் இவைகளைக் கவனிப்பதுடன் அறையில் உள்ள கைதிகளைக் கவனிக்க வேண்டும்.
6. ஒரே இடத்தில் நிற்காமல் கூடுமானவரை கைதிகள் அல்லது சொத்துக்கள் தன் பார்வையிலேயே இருக்கும்படி உலாவிக் கொண்டிருக்க வேண்டும்.
7. இரவு நேரத்தில் தான் விடுபட வேண்டிய நேரத்துக்கு ஐந்து நிமிடம் முன்னுல் அடுத்த பாராக்காரரை நியமிக்க அதிகாரியை எழுப்ப வேண்டும்.
8. உட்காரவோ அல்லது சோம்பல் தனமாய் உலாவிக்கொண்டோ இருக்கக் கூடாது.
9. யாருடனும் பேசக்கூடாது
10. எக்காரணத்தைக்கொண்டும் ஆயுதங்களைக் கைவிடக்கூடாது.
11. பாராக்காரர் அன்னியரைக் காக்கும் விதம்

யாராவது ஒரு நபர் அல்லது நபர்கள் நெருங்கும் போது உரத்த குரலில் "ஹால்ட் ஹூ கம்ஸ தேர்" (Halt who comes there) என்று உரக்கக்கேட்டு அதே சமயத்தில் "ஆன் கார்டு (On Guard) நிலைக்கு வர வேண்டும். நெருங்கு நபர் பாஸ் (Pass) அல்லது வேறு அடையாளத்திஞல் தெரிந்து கொள்ளப்பட்ட பிறது பாராக்காரர் அல்லது வேறு அடையாளத்திஞல் தெரிந்து கொள்ளப்பட்ட பிறகு பாராக்காரர் அல்லது கார்டு கமாண்டர் "பாஸ் ஆல் இஸ் வெல்" (Pass all is well) என்று சொல்ல வேண்டும். நெருங்கும் நபர் நிற்காமலும் பதில் சொல்லாவிட்டாலும் "பாராக்காரர்கள் டர்ன் - அவுட் (Guard turn-out) செய்ய வேண்டும். நெருங்கம் நபர் அவ்விடம் வந்தமைக்கு சரியான காரணம் கூறுவிட்டால் நிறுத்தி வைத்து நிலைய அதிகாரிக்கு ரிப்போர்ட செய்ய வேண்டும்.

12. பாராக்காரர் அவருக்கு மேல் நிலைய அதிகாரியோ அல்லது மற்ற முதுநிலை அதிகாரியோ இல்லாத போது முதல் அறிக்கை வந்தால் பதிவு செய்து உடன் காவல் நிலைய அதிகாரிக்க தெரிவிக்க வேண்டும். ஆனுல் புலன் விசாரணை செய்ய அதிகாரமில்லை.

13. கைதிகளை ஒப்புக்கொள்ளும் போது நன்ருக உடல் பரிசோதனை செய்து ஒப்புக்கொள்ள வேண்டும்.

14. காவல் நிலையத்திலிருக்கும் கைதிகள், தற்கொலை செய்து கொள்ளாமலும் உடலில் காயங்கள் ஏற்படத்திக் கொள்ளாமலும் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் கைதிகளை யாரும் துன்புறுத்தாமல் பார்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

## 11. காவல் நிலையத்தின் அன்றுடப் பணிகள்
## POLICE STATION ROUTINE AND RECORDS

நிரந்தரமான மாமூல் அலுவல்கள் -

1. கார்டு பணி
2. நிலைய சென்ட்ரி பணி
3. நிலைய எழுத்தர் பணி
4. சார்பாய்வாளர் உதவிப்பணி
5. அழைப்பாணை மற்றம் கட்டளை நிறைவேற்றும் அலுவல்கள்

கிராமப்புற காவல் நிலையங்களில் வழக்கமாக காலை 7.00 மணிக்கு பெயரெடுப்பு (ரோல்கால்) நடத்தப்படும். அதற்கு எல்லா காவலர்களும் தவறுது ஆஜராக வேண்டும், வெள்ளிக்கிழமையில் கவாத்து செய்ய வேண்டும். சனிக்கிழமை நிலையத்தையும், சுற்றுப்புறத்தையும் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபடுத்த வேண்டும். ஞாயிறன்று காவலர்களின் ஆஜர் மட்டும் பார்க்கப்படும். நகர்ப்புற காவல் நிலையங்களில் காலை 7.00 முதல் 8.00 மணி வரை கீழ்க்கண்டவாறு காவலர்களுக்கு அலுவல் கொடுக்கப்படும்.

திங்கள், செவ்வாய்,புதன் - வகுப்புகள் நடத்துதல், வழக்குகள் பற்றிய விவரம், பொது அறிவு முதலின.

வியாழன், சனி – ஆயுதச் சுத்திகரிப்புப் பணி

வெள்ளி – கவாத்து (பெரேடு – Parade)

காவலர்கள் வகுப்புகளில் நடத்தப்படும் விவரங்களை தனியாக நோட்டு போட்டு அவற்றில் குறித்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு தலைமைக் காவலருக்கும், காவலருக்கும் வாரத்தில் ஆறு நாள் பணி செய்ததும், ஏழாவது நாள் ஓய்வு அளிக்கப்படும் முக்கியமான அலுவலின் பேரில் வார ஓய்வு கொடுக்கப்படாது. சம்பந்தப்பட்ட நாளில் அலுவலுக்கு நியமிக்கப்பட்டால் காவலருக்கு இ.டி.ஆர் (Extra Time Remuneration) உரிமை பெற்று (claim) நிலைய அதிகாரியால் நடவடிக்கை எடுத்துக் கொடுக்கப்படும். வார ஓய்வு பட்டியல் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று அடுத்து வரும் ஞாயிறு அல்லது சனிக்கிழமை வரையிலான ஒரு வாரத்திற்கு தயார் செய்து அறிக்கைப் பலகையில் (Notice Board) காவலர்கள், தலைமை காவலர்கள் தெரிய ஒட்டப்பட வேண்டும்.

காவல் நிலையத்தில் காவலர்கள் மேற்குறிப்பிட்ட பணிகள் தவிர கீழ்க்கண்ட பணிகளுக்கும் நியமிக்கப்படுவர்.

1. சாலை ரோந்து
2. நகர பீட் அலுவல்
3. கிராம பீட் அலுவல்
4. புகைவண்டி நிலைய பீட் அலுவல்
5. போக்குவரத்து பீட் அலுவல்
6. புலனாய்வு செய்து வழக்குகளைக் கண்டுபிடிக்கும் பணி
7. தலைமறைவாயுள்ள குற்றவாளிகளைப் பற்றித் துப்பு விசாரித்தல்
8. கைதிகளை வழி நடத்திச் செல்லுதல்
9. கண்ணோக்கம் வைத்து பின் தொடர்புதல்
10. மது விலக்கு மற்றும் சூதாட்ட வழக்குகளைக் கண்டுபிடித்தல்.
11. அழைப்பாணை சார்பு செய்தலும் கட்டனை நிறைவேற்றுதலும்

அலுவல்களில் அனுப்பப்படும் காவலர்கள் கடவுச்சீட்டு பெற்றுச் செல்ல வேண்டும். பீட் அலுவலில் அனுப்பப்படும் காவலர்கள் விவரமான அறிவுரையுடன் கூடிய பீட் டிக்கெட் பெற்றுச் சென்று தொடர்ந்து மேலே குறிப்பிட்டவைகளில் 6,7,8,10,11 அலுவல்களைச் செய்வதற்குச் செல்லும் நபர்கள் தங்கள் நிலைய அதிகாரிக்கு மூன்று நாட்களுக்கொரு முறை அலுவல் பற்றிய விவர மடங்கிய அறிக்கை ஒன்று அனுப்பவேண்டும்.

காவலர்கள் கீழ்க்கண்ட பலவகைப்பட்ட அலுவல்களையும் செய்ய பணிக்கப்படுவர்.

1. திருவிழா போன்றவைக்கான பாதுகாப்பு அலுவல்
2. மொபிலைசேஷன் பணி (Mobilization)
3. நீதிமன்ற அலுவல்
4. துரித தபால்களை எடுத்துச்செல்லும் அலுவல்
5. கிடங்குபணி

காவலர்கள் எந்த அலுவலுக்குச் சென்றாலும் நிலையத்திலிருந்து புறப்படவேண்டுமே தவிர தங்கள் வீட்டிலிருந்து புறப்படக் கூடாது.

## LIST OF POLICE STATION RECORDS TO BE MAINTAINED REGISTER NUMBER –WISE

1. General Diary (பொது நாட்குறிப்பு)
2. First Information Reprot Book (முதல் தாக்கல் அறிக்ககை புத்தகம;)
3. Station Crime History (நிலைய குற்ற வரலாறு)

(a) Part – I – True Property Offences Rgister (உண்மையான குற்றபதிவேடு)
(b) Part – II – Crime Chart (குற்ற வரைபடம்)
(c) Part – III – General Coniction Register (பொது தண்டனை பதிவேடு)
(d) Part – IV – Village Crime History (கிராம குற்ற வரலாறு)
(e) Part – V – History Sheet (வரலாற்று ஏடுகள்)

4. Alphabetical loose leaves index (வரிசைக்கிரமான பெயர்களின் பதிவேடு)
5. Ex- Convicts or KD Check Register (பழைய குற்றவாளி (அ) கேடி சோதனை பதிவேடு)
6. Village Crime Register (கிராம குற்ற பதிவேடு)
7. Information Sheets Part – A (செய்தித்தாள் பகுதி – அ)
8. Information Sheets Part – B (செய்தித்தாள் பகுதி – ஆ)
9. Issue of Cards
10. Sentry Relief Book (காவலர் மாற்றுப் புத்தகம்)
11. Duty Roster (உத்தியோக பதிவேடு)
12. Process Register (சம்மன் பதிவேடு)
13. Arrest Report (கைதி செய்ததற்கான பதிவேடு)
14. Bail and Security Bonds (ஜாமீன் பத்திரம்)
15. Prisoners Search Register (கைதிகள் பரிசோதனைப் பதிவேடு)
16. Form-95 Register (பாரம் எண் 95 சொத்துக்கள் கைப்பற்றியதற்கான தாசிதா).
17. FIR Index in the revised proforma for checking up of Investigation Charge Sheet.
18. Conviction Memo Book (தண்டனை தாக்கீது புத்தகம்
19. Petty Cases Register (சிறிய குற்றங்களின் பதிவேடு.
20. Motor Vehicles Act Cases Register (மோட்டார் வாகன குறிப்பேடு).
21. Note Books (நோட் புத்தகம்)
22. Proclaimed Offenders Register as per S.O.No. 6/89 (விளம்பரம் செய்யப்பட்ட நபர்களைப் பற்றிய பதிவேடு காவல் நிர்ணய ஆரண எண்.6/89)
23. Armed Forces Deserters Registers as per S.O.No.6/89 (ஆயுதப் பிரிவில் வேலை நீக்கம் செய்ததற்கான பதிவேடு – நிர்ணய ஆணை எண் 6/89).
24. Casual Inspection Register (சாதாரண தணிக்கை பதிவேடு)
25. Personal files of Proclaimed Offenders as per S.O.Nடி.6,89 (விளம்பரம் செய்யப்பட்டவர்களுக்கான தணிக்கைக் குறிப்பேடு).
26. Beat Books (ரோந்து புத்தகம்)
27. Panchayathar Summons Book (பஞ்சாயத்தார் சம்மன் புத்தகம்).
28. Charge Sheet Book (குற்றப் பத்திரிக்கை புத்தகம்)
29. Final Report Book (இறுதி அறிக்கை புத்தகம்)
30. Notice to complainants (வாதிக்கு அறிவிப்பு)
31. Arms Lience Register (ஆயுத உரிமம் பதிவேடு)
32. Arms Deposit Register (ஆயுத வைப்பு பதிவேடு)
33. Govt. property Register (அரசாங்கச் சொத்து பதிவேடு)
34. Indent Book (குறிப்பேடு)
35. Govt. Fire Arms and Ammunition Register (அரசு துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் பதிவேடு).
36. Railway Warrants (இரயில் வாரண்டு)

37. Bus Warrants (பஸ் வாரண்டு)
38. Permanent Advance Register (நிரந்தர முன் பதிவு பதிவேடு)
39. Cash Book (ரொக்க பதிவேடு)
40. Reference / Petition Register (விண்ணப்ப ஆதாரப் பதிவு).
41. Trunkcall Register (தொலைபேசி குறிப்பேடு)
42. Gezetted Officers Visiting Note (உயர் அதிகாரிகளின் வருகைப் பதிவேடு)
43. Criminal Intelligence Gazette file (குற்ற தகவல் சேகரிப்பு இதழ்)
44. Standing order file (நிர்ணய ஆணை கோப்பு)
45. Other orders from Chief Office (தலைமை அலுவலக இதர ஆணை கோப்புகள்).

## LIST OF RECORDS TO BE MAINTAINED IN O.P.S.

1. General Diary (பொது தினக் குறிப்பேடு)
2. Duty Roster (உத்தியோக பதிவேடு)
3. Note Books of SHO/HC/PCs (காவலர், தலைமைக் காவலர் மற்றும் உயர் அதிகாரிகளின் நோட்டு புத்தகங்கள்.
4. Copies of history sheets of persons watched (கண்காணிப்பு நபரின் சரித்திர நாளேட்டின் நகல்கள்)
5. Enquiry slips sent (விசாரணை ஏடுகளை அனுப்புதல்)
6. Enquiry slips received (விசாரணை ஏடுகளைப் பெற்றுக்கொள்ளல்).
7. Beat Books (ரோந்து புத்தகம்).
8. Sentry Relief Book (காவலர் மாற்றுப் புத்தகம்)
9. Village Roster (கிராமப் பதிவேடு)
10. Inspector's Casual Insoection Register (காவல் துறை ஆய்வாளரின் தற்செயலான பரிசோதனைப் புத்தகம்).
11. Formal Inspection Register for Inspectors (காவல்துறை ஆய்வாளர்களின் வழக்கப்படியான பரிசோதனைப் புத்தகம்).
12. Superior Officer's Casual Inspection Register (உயர் அதிகாரிகளின் தற்செயலான பரிசோதனைப் புத்தகம்).
13. Tapal Book (தபால் புத்தகம்).
14. Standing Order file (நிர்ணய ஆணை கோப்பு).
15. Check Register of BC's suspects (கெட்ட நடத்தை உள்ளவர்களைப் பற்றியும், சந்தேக நபர்களையும் சோதனை செய்யப்படும் புத்தகம்).
16. Arrest Report (கைதி அறிக்கை).
17. Prisoners Search Register (கைதிகள் சோதனைப் புத்தகம்).

## 12. காவல் துறை பணியைப் பற்றிய அறிவியல் ரீதியான அறிவு

## Application of Science and Technology to Police Work

### முதல் தாக்கல் அறிக்கை (F.I.R.)

முதல் தாக்கல் அறிக்கை ஏ்னபது குற்றம் சாட்டுவதற்கும், மறுப்பதற்கும் உள்ள சட்டபூர்வமான ஆவணம் (Documents) ஆகும். இது கீழ்க்காணும் உட்பிரிகள் அடங்கியுள்ளதாகும்.

(a) இந்த அறிக்கையானது முதல் முறையாக ஒரு காவல் நிலைய பொறுப்பு அதிகாரியின் முன்பு கொடுக்கப்படும் புகார் ஆகும்.

(b) இவ்வறிக்கை ஒரு பிடிக்கக் கூடிய குற்றத்தைச் செய்வதையோ மற்றும் புகாரின் தன்மையையோ (அ) ஒரு குற்றத்தினை போலீசாருக்கு Sec.156 Cr.PC-யின் மூலம் புலன் விசாரணையை செய்வதற்கு அதிகாரம் வழங்குகிறது.

(c) இவ்வறிக்கை வாய்மொழியாகக் கொடுக்கப்பட்டால் அதனை எழுத்து மூலமாக்கி அதனைத் தகவல் கொடுப்போருக்குப் படித்துக்காட்டி அவரது கையொப்பமோ (அ) எழுதப்படிக்கத் தெரியாதவராயின் அவரது இடக்கைப் பெருவிரல்ரேகைப் பதிவோ அதில் பெறப்பட வேண்டும்

(d) இந்த அறிக்கையானது G.D.யைத்தவிர அதற்கென்று உள்ள F.I.R. Book-கிலும் பதிவு செய்யப்பட வேண்டும்.

(e) அவ்வாறு பெறப்பட்ட அறிக்கையின் நகலை குறிப்பிட்டமாதிரி படிவத்தில் (F.I.R) அந்தக் தகவல் கொடுப்போருக்கு இலவலமாக வழங்கப்பட வேண்டும். மேலும் பெற்றுக் கொண்டதற்கான கையொப்பம் பெற வேண்டும்.

**முதல் தாக்கல் அறிக்கையின் முக்கியத்துவங்கள்.**

ஒரு F.I.R-ஐப் பதிவு செய்யும்போது அந்த செயலுக்கான நிகழ்ச்சி உண்மையானதாக, தகவல் கொடுப்போரின் தகவலை அப்படியே பதிவு செய்யப்பட வேண்டும். இதில் பதிவு செய்பவரோ (அ) மற்றொருடைய எண்ணமோ பதியாமல் இருக்க வேண்டும். அப்படி எழுதும் போது கீழ்க்காண்பவைகளை ஆராய்ந்து அறிய வேண்டும்.

1. தகவல் ஆனது ஒழுங்காகவும் தெரிவாகவும் பயமோ (அ நடுக்கமோ இல்லாமல் எந்த அளவுக்கு விரிவாக இருக்க வேண்டுமோ அவ்வாறு இருக்க வேண்டும்.
2. தகவல் கொடுப்போர் பாதிக்கப்பட்டவரா (அ) நேரடியாகப் பார்த்த சாட்சியா (அ) காதால் கேட்ட சாட்சியா என்று குறிக்கப்பட வேண்டும்.
3. தாக்குபவன் / குற்றம் புரிநதோன் பற்றிய விவரங்கள் (பெயர், விலாசம், தோற்றம் மற்றும் பயன்படுத்திய வாகனம், அதன் முழுவிவரம் ஆகியவற்றைப் பற்றிய விசாரணையை நடத்த வேண்டும்.
4. அக்குற்றம் யாருக்கு/சொத்துக்கு எதிராக நடத்தப்பட்டது என்பதைப் பற்றிக் குறிப்பிட வேண்டும்.

5. குற்றத்திற்கான நோக்கம், நேரம், இடம் குற்றத்திற்குப் பயன் படுத்தப்பட்ட ஆயுதம், சாட்சிகள், அக்குற்றம் எந்த முறையில் நடத்தப்பட்டது என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.
6. குற்றவாளி எப்படி தப்பித்தான் (திசை, வாகனம்)தகவல் கொடுப்பதில் காலம் தாழ்த்தியமை, குற்றவாளியால் எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் குற்றவாளியைப் பற்றிய குறிப்புகள் (உடமை, கை, கால் ரேகைப்பதிவுகள்) போன்றவைகளை ஆராயவேண்டும்.
7. இவ்வாறு எழுத்து மூலமாகப் பெற்றபின் போலீசாரின் நடவடிக்கை என்ன என்பதைக் குறிக்க வேண்டும்.

முதல் தாக்கல் அறிக்கையை, பாதிக்கப்பட்ட நபரோ (அ) அவருக்காக மற்றவரோ, யாரொருவர் நிகழ்ச்சியை அறிந்து உள்ளவரே, குற்றவாளியோ காவல் நிலையப் பொறுப்பதிகாரியின் மனதில் உதித்தாலோ (அ) தகவல் பேரிலோ (அ) ஒரு மாஜிஸ்ரேட்டின் உத்தரவின் பேரிலோ எழுதப்படுவதாகும். அதில் தகவல் கொடுப்போனுடைய கையொப்பமோ விரல் ரேகைப் பதிவோ பெறப்பட வேண்டும்.

அப்படி முதல் தாக்கல் அறிக்கையை காவல் நிலைய பொறுப்பதிகாரியோ (அ) அவருக்கு அடுத்து பதவி வகிப்பவரோ (போலீஸ் கான்ஸ்டபில் பதவிக்கு அதிகமான பதவி) (அ) அந்தக் காவல் நிலைய பொறுப்பதிகாரிக்கு மேல் பதவி வகிக்கும் காவல் அதிகாரியோ பதிவு செய்வார்.

முதல் தாக்கல் அறிக்கையை பதிவு செய்வதற்கு தகவல் கொடுப்போர் அந்த முதல் தாக்கல் அறிக்கையில் கையொப்பம் (அ) கைரேகை பதிவு செய்ய மறுத்தால் அந்த நபர் பிரிவு 180 இ.த.ச-யின் படி தண்டிக்கப்படுவார்.

முதல் தாக்கல் அறிக்கையை எழுத மறுத்த காவல் அதிகாரி .பிரிவு 217 இ.த.ச.-யின் படியும், தவறாகவோ, மாற்றியோ, முரணகப் பதிவு செய்தவராயின் பிரிவு.177 மற்றும் பிரிவ 218 இ.த.ச-யின் படியும், அந்தத் தகவலானது பொய்யானதாயின் அந்தக் தகவல் கொடுப்போனை பிரிவு. 182 (அ) 211 இ.த.ச-யின் படியும் தண்டிக்கப்படுவர்.

## புலன் விசாரணையில் துப்பு துலக்குவதற்குக் குற்றம் நடந்த இடத்தை உற்று நோக்குவதற்கான முறைகள் :

ஒரு குற்றத்தில் இருந்து குற்றவாளியைக் கண்டு பிடிப்பது மிகவும் சாமான்யமானது கிடையாது. புலன் விசாரணையை தக்க இடத்திலிருந்து குறித்த நேரத்தில் உண்மையாகவும், பொறுமையோடும் நிதானத்தோடும் தொடர்ந்தால் அந்தக் குற்றவாளியை அடையாளம், காணலாம். இந்தப் புலன் விசாரணையானது நிகழ்ச்சி நடந்த இடத்தில் இருந்து ஆரம்பிக்கிறது. அந்த விசாரணையானது, அந்தப் புலன் விசாரணை அதிகாரியின் உண்மையான (அ) தவறான வழிமுறைகள் (அ) அணுகு முறைகளைப் பொறுத்து அமையும், எந்த ஒரு குற்றம் புரிந்தோரைத் தீர்க்க முற்படும் அதிகாரி அதற்காக அவர் அந்த குற்றம் நடந்த இடத்தை ஆராய்வதே முறையாகும். எந்த ஒரு குற்றவாளியும், முன்னெச்சரிக்கையுடன் திட்டம் தீட்டி அதற்கென்று தேர்ந்தெடுத்த இடம் காலத்திலேயே செய்ய முற்படுகிறான். அவ்வாறு அந்தப் புலன் விசாரணை

அதிகாரியும் ஏன் அந்தக் குற்றவாளி அந்த இடம், நேரம் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்தான் என்று அறிய தலைப்பட வேண்டும்.

குற்றம் நடந்த இடத்தை ஆராய முற்படும்போது குற்றம் என்பது இருவகைப் படுத்தப்படுகிறது. (1) தொழில் ரீதியான குற்றம் (2) தொழில் ரீதியற்ற குற்றம். ஒரு மனிதனுக்கெதிராக மட்டும் இழைக்கப்படும் குற்றம் தொழில் ரீதியற்ற குற்றமாகும். அதே மனிதனுக்கும், உடல் உடமைக்கும் எதிராக நடப்பது தொழில் ரீதியானதாகும். தொழில் ரீதியான குற்றம் உன்னிப்பான இடச்சோதனை நிறைய குற்றங்களுக்கு தீர்வு கண்டுள்ளது.

குற்றவாளி ஒரு குற்றத்தைச் செய்ய தலைப்படும்போது, செய்யும்போது, தப்பிக்கும்போது ஏதாவது ஒரு சாட்சியத்தினை அவன் அந்த இடத்தில் விட்டு விட்டுச் செல்கிறன். மற்ற வகையில் அந்த நிகழ்ச்சி நடந்த இடம் அந்தக் குற்றவாளியோடு தொடர்பு கொண்டதாகும்,

அடிச்சுவடுகள் சிறியதோ (அ) பெரியதோ ஆயின் அது ஒரு நம்பகமான சாட்சியமாக அறிவியல் பரிசோதனையின் மூலம் உருவெடுக்கிறது. தேக சம்பந்தமான சாட்சியங்கள் கிடைக்கப்பெற்றல் (1) குற்றத்தின் தன்மை, நிகழ்வு ஆகியவற்றைத் தீர்மானிக்கவும் (2) குற்றவாளியை இனங்காணவும் (3) குற்றவாளியை கைது செய்யவும் (அ) அறியாதவராயின் மன்னித்து விடவும் உதவுகிறது.

குற்ற நிகழ்ச்சியானது அகத்திலோ (அ) புறத்திலோ நடைபெற்றல் கீழ்க்காணும் துப்புகள் கிடைக்கின்றதா என்று பார்க்க வேண்டும்.

(a) கொலையாயின், அதற்கு இரையானவர் உயிருடன் இருக்கிறரா (அ) இறந்து விட்டாரா என்று சந்தேகம் ஏற்படின் மருத்துவ உதவி வழங்க வேண்டும். அப்புறப்படுத்துமுன் அந்த உடலின் நிலை, முடி, தோல் மற்றும் ஏதாகிலும் துப்பு கிடைக்கிறதா என்று ஆராய வேண்டும். தேவையான போட்டோக்களை அங்குள்ள பொருட்கள் மற்றும் உடல் போன்றவற்றை பல கோணங்களில் படம் பிடிக்க வேண்டும். ‘பால்’ (sex) சம்பந்தப்பட்டதாயின் விந்து, காயம், மற்றும் பலவந்தம் போன்ற ஆதாரங்களை சேகரிக்க வேண்டும். அந்த நிகழ்ச்சிக்கு ஆட்பட்டவரின் தலை மற்றும் உற்பத்தி உறுப்பில் உள்ள முடிகளை மாதிரி சோதனைக்கு எடுக்க வேண்டும். இரத்தம், விந்து, வாந்தி போன்ற கறைகள் உள்ள துணிகள், படுக்கைகள், மண், காலடிகள், கைரேகைகள், ஆயுதங்கள், கொலையாளியினல் உபயோகப்படுத்தப்பட்ட பொருட்கள் (மருந்துகள், துணிகள் சிகரெட்டு, வத்திப்பெட்டி) போன்றவற்றை ஆராய வேண்டும். கொலையாளியின் நுழைவு, வெளியேற்றம் போன்ற இடத்தில் கிடைக்கும் துப்புதுலக்கும் சாட்சியங்கள் கிடைக்கின்றதா என்று ஆராய வேண்டும். இறந்துவிட்டரின் உள் உறுப்புகளை (viscera) எடுத்து பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும்.

கொள்ளை, கூட்டுக் கொள்ளையாயின் கை மற்றும் கால் ரேகைப்பதிவுகள் கொள்ளை இடப்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், குற்றவாளியின் மீது குற்றம் சுமத்தப்படும் உடமைகள், இரத்தக்கறைகள், வெற்று தோட்டாக்கள் ஆகியவைகள் அந்த இடத்தில்

கிடைக்கிறதாவென்று ஆராயவேண்டும். கொள்ளையிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம், அதன் அடிச்சுவடுகள் போன்றவற்றை ஆராய வேண்டும். கைரேகை பதிவு நிபுணர் மற்றும் துப்புநாய் போன்றவற்றை உபயோகிக்க வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு நிகழ்ச்சிக்குத் தக்கவாறு கொலையாளியோ மற்றும் குற்றவாளியோடு சம்பந்தப்பட்ட பொருட்கள், சாதனங்கள், இடம், நேரம் குற்றத்திற்கான நோக்கம், குற்றத்தோடு கொலையாளி மற்றும் அதற்கு ஆட்பட்டவர் (victim) தொடர்பு, கண் மற்றும் காதால் கேட்ட சாட்சியங்கள், அந்த நிகழ்ச்சி இடத்தில் கிடைக்கும் வினோதமாக பொருட்கள் அந்த இடத்தில் உள்ள பொருட்கள், அவற்றின் அலங்கோல நிலை ஆகியவற்றை ஆராய்ந்து துப்பு ஆராய்தலும், மற்றும் கைரேகை பதிவு நிபுணா, போட்டோகிராபர், துப்பறியும் நாய், குற்றம் கண்டு பிடிக்கும் படை ஆகியவற்றை முறையாக அந்த நிகழ்ச்சி இடத்திலிருந்து ஏவுவதன் மூலம், ஒரு கண்டு பிடிக்கமுடியாத குற்றத்தையும் கண்டு பிடிக்கலாம். மேலும் இந்த துப்புகளே அந்த குற்றவாளியின் மீது குற்றப்பத்திரிக்கை சாட்டவும், மறுக்கவும், தண்டனை (அ) விடுவிக்கவும் ஆதாரமாக விளங்குகிறது.

## கைவிரல் ரேகை, கால் ரேகைப் பதிவுகள், இரத்தம் மற்றும் நிழற்படிவங்கள் எடுப்பது :

கைவரல்கள், உள்ளங்கைகள், உள்ளங்கால், குதிகால் ஆகியவற்றில் உள்ள அலை அலையான ரேகைகள் ஒருமனிதன் பிறப்பதற்கு 4 (அ) 5 மாதங்களுக்கு முன்னர் தோன்றுகிறது. அவ்வாறு ஒருமுறை தோன்றின் அது நிலையாக அவன் இறக்கும் வரையில் அதிலும் அந்தத் தசைகளானது அழுகும் வரையிலும் இருக்கிறது. அதற்கான முக்கியக் கூறுகளாவன.

a. ஒரே மாதிரியான ரேகைகள் இருவருக்கு இருப்பதில்லை, இரட்டையராக இருப்பினும் ஒன்றுக இருப்பதில்லை.
b. இந்த ரேகைகள் எப்போதும் மாறுவதில்லை
c. இரண சிகிச்சை முறையினுலும் கூட அதனை மாற்றவோ,அழிக்கவோ முடியாமல் உள்ளது.

### (a) குற்றம் நடந்த இடத்தில் கிடைக்கக் கூடிய ரேகைகளின் வகைகள்

3 வகையான ரேகைப் பதிவுகள் குற்றம் நடந்த இடத்தில் கிடைக்கின்றன. அவையாவன :-

### 1. பிளாஸ்டிக் படிவுகள் :

இவ்வகையான ரேகைப் பதிவுகள் சோப்பு, எண்ணெய், வாசலின் திரவியம், கிரீஸ் போன்ற பொருட்களின் மீது ஏற்பட்டவையாகும். இந்தப் படிவங்களை நிழற்படிவத்தின் மூலமாக எடுத்துப் பாதுகாக்கலாம். புற ஊதாக்கதிர்கள் மூலம் இம்மாதிரியான படிங்களைக் கண்டு பிடிக்கலாம்.

### 2. பார்க்கக் கூடிய (அ) தற்செயலான ரேகைப்பதிவு (Visible or Chance Prints)

இவ்வகை ரேகைப் பதிவுகள் கயவர்களால் பெயிண்ட, இரத்த அழுக்கு இங்க் ஆகியவற்றின் மீது விட்டு செல்லப்பட்ட ரேகைப் பதிவுகள் ஆகும். இதில் கிடைக்கும் பதிவுகள் மிகவும் தெளிவாகக் கிடைக்காது.

### 3. எண்ணெய்ப் பசை போன்றவற்றால் மறைக்கப்பட்ட ரேகைப்பதிவுகள் (Latent Prints left due to ooily due to oily matter)

இவ்வகை ரேகைப் பதிவுகள் கண்ணுக்குப் புலப்படாதவையாகும். இந்த ரேகைப்பதிவுகள் குற்றவாளியால் பொதுவாக பயன்படுத்தும் பொருட்களின் துணிகள், வரும்புகள் போன்றவற்றில் கிடைக்கிறது. இவைகள் கைக்குட்டைகள், கையுறை உபயோகிப்பதனால் கண்களுக்கு புலப்படால் இருக்கிறது. இவற்றை வெற்றுக் கண்களால் பார்க்க முடியாது. இவற்றை பூதக்கண்ணாடி மற்றும் பிளாஷ் லைட்டின் உதவியால் கண்டு பிடிக்கலாம். இவற்றை இரசாயனத் துகள்கள், திரவங்கள், வாயு மற்றும் போட்டோ எடுப்பதன் மூலமும் (அ) போலியோ பேப்பரின் மூலமும் எடுக்கலாம்.

### b) ரேகைப்பதிவுகளைத் தேடும் இடங்கள் :

கண்ணாடி, மெழுகுவர்த்தி, உடைந்த ஜன்னல் கண்ணாடிகள், கதவு மேஜை, நகைப்பேழை, டம்ளர்கள், பாத்திரங்கள், உணவு வைக்கும் பாத்திரங்கள் ஆகிய இடங்களில் கிடைக்கும். கொலை மற்றும் சண்டை வழக்குகளில் கத்தி, ரேஸர், துப்பாக்கிகள், தோட்டாக்கள், பாட்டில்கள் ஆகியவற்றில் கிடைக்கும். வாகனங்களாயின் ஜன்னல் கதவுகள், கதவின் பிடிகள், அதனைச் சார்ந்துள்ள இடங்கள், காற்றுக் கண்ணாடிகள் மற்றும் பளபளப்பான இடங்களில் கிடைக்கும்.,

இவ்வாறு கிடைக்கும் ரேகைப்பதிவுகளினால் குற்றவாளியை இனங்கொள்ளவும், குற்றவாளி முன் தண்டனை பெற்றவரா என்பதை அறியவும், அடையாளம் தெரியாத உடலைக் கண்டு பிடிக்கவும் பயன்படுகிறது.

### c) குற்றம் நடந்த இடத்தில் போட்டோவின் பங்கு :

போலிஸ் அறிவியலில் குற்றத்தைக் கண்டுபிடித்து, முக்கியமான, உண்மையான, துல்லியமான, வெளிப்டையான ஒரு பதிவேடாக போட்டோ பயன்படுகிறது. தற்காலங்களில் சினிமா படக் காமராக்களும் போலீஸ் துறையில் பயன் படுத்தப்படுகிறது. சட்ட விரோதமான கூட்டம், சூதாட்டம், விடுதிகள், கையூட்டு பெறுவது போன்றவற்றை போட்டோ எடுத்துப் பின்னர் விசாரணைக்கும் மற்றும் குற்றநடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. சூரடியோ, போட்டோகிராபி, புற ஊதா, அகச்சிகப்புக் கதிரியக்கப் போட்டோக் கருவிகள், கண்ணுக்கும் புலப்படாதவை, திருட்டுக் கையெழுத்து, எலும்பு முறிவு, உடம்பில் உள்ள புறப்பொருட்கள், மங்கிய எழுத்துக்கள், எரிந்த தஸ்தாவேஜீ, மறைத்து வைக்கப்பட்ட வெடிகள், சந்கேமான பார்சல்கள் ஆகியவற்றை ஆராய்ந்தறிய உதவுகிறது. மேலும் இதுவே ஒரு சாட்சியமாகவும் விளங்குகிறது.

### d) பாத ரேகைப் பதிவுகள் :

இவ்வகைப் பதிவுகளாவது போட்டோவின் மூலமோ பிளாஸ்டர் ஆப் பாரிஸின் மூலமோ எடுக்கப்பட்டு பின்னர் குற்றவாளியைக் கண்டு பிடிக்கவும் (அ) குற்றத்தை நிரூபிக்க நீதிபதியின் முன் எடுக்கப்பட்ட குற்றவாளியின் கால்ரேகைப் பதிவுகளோடு ஒப்புமை செய்யப்பட்டபின் குற்றம் ஊர்ஜிதம் செய்யப்படுகிறது.

### (e) இரத்தம் மற்றும் இரத்தப் படிவுகள் :

கொலை, கொள்ளை, அடிதடி போன்ற வழக்குகளில் இரத்தக்கறைகள், இரத்தப்படிவுகள், இரத்தம் தோய்ந்த துணிகள் போன்றவற்றை நிகழ்ச்சி நடந்த இடத்தில் இருந்து பத்திரமாக சேகரித்து அதனை ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பி அந்த சோதனையினுல் மேல் நடவடிக்கைகளைத் தொடரலாம். இதன் மூலம் குற்றத்தினுல் பாதிக்கப்பட்டவருடைய தொடர்பு பயன்படுத்தப்பட்ட ஆயதங்களோடு தொடர்பு ஆகியவை குற்றத்தினால் பாதிக்கப்பட்டவருடைய தொடர்பு நிச்சயிக்கப்படுகிறது.

### f) நிபுணர்கள் வரும் வரை குற்றம் நிகழ்ந்த இடத்தைப் பாதுகாத்தல் :

புலன் விசாரணை அதிகாரியும் மற்றும் உள்ள காவல் அதிகாரிகளும் நிபுணர்கள் வரும்வரை குற்றம் நிகழ்ந்த இடத்தைப் பின்வருமாறு பாதுகாக்க வேண்டும்.

1. நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு தொந்தரவு வராமல் பாதுகாக்க வேண்டும்.
2. எந்த புற நபரோ, வேண்டப்படாதவரோ அந்த இடத்தில் அனுமதிக்கப் படக் கூடாது. பொதுமக்கள் கூட்டமானது நிகழ்ச்சி நடந்த இடத்தில் தடயங்களை கலைக்காத தூரத்தில் வைத்திருக்க வேண்டும். யாரொருவரும் பொருளையும் தொடாமலும் கலைக்காமலும் பாதுகாக்கப் பட வேண்டும்..
3. ஜாக்கிரதையான நடவடிக்கைகளை அங்குள்ள பொருட்களை எடுக்கும்போது தடயங்கள் அழியாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். சோதனை நடக்குமிடத்தில் நம்பிக்கைக்கு பாத்திரமான சாட்சிகளை அழைக்க வேண்டும்.
4. எல்லா வகையான தடயங்களும் நிபுணர் வரும்வரை பாதுகாக்க வேண்டும். சூடு, நெருப்பு, வெடி போன்றவை நிகழுமிடத்து நிபுணர் சோதிக்கும் முன்னர் எதனையும் தொடக்கூடாது.
5. சாதகமான சாட்சியங்கள், துப்புகள் கிடைக்கும் வரையில் முறையான, முழு நேர முயற்சியால் குற்றத்தையறிய முற்பட வேண்டும்

## கைது செய்தல்

கைது செய்வதற்குரிய குற்றத்தை ஒருவன் செய்தானுகையால் அவனை ஒரு போலீஸ் அதிகாரி வாரண்ட் இன்றி கைது செய்யலாம். அதே போன்று கைதி செய்வதற்கல்லாத குற்றத்தைப் புரிந்தானுகையால் அவனை போலீஸ் அதிகாரி கைது செய்வதற்கு அதிகாரம் கிடையாது. கைது செய்வதற்கல்லாத குற்றத்தில் ஒருவனை Sec. 155 (2)Cr.PC யின் படி மாஜிஸ்ரேட்டின் உத்தரவினுல் மட்டுமே ஒரு போலீஸ் அதிகாரி

விசாரணை செய்யலாம். மற்றபடி போலீசாருக்கு அதிகாரம் கிடையாது. அவ்வாறு தவறான முறையில் கைது செய்தால் அவர் Sec.342 IPC-யின் படி தண்டிக்கப்படுவார்.

கைது செய்யும்போது ஒரு போலீஸ் அதிகாரி கீழக்காணும் வரிகளை மனதில் கொள்ள வேண்டும். அவைகளாவன –

1. பலாத்காரமோ (அ) அனுவசியமான முறையையோ ஒருவனைக் கைது செய்யும்போது பயன்படுத்தக்கூடாது. அரஸ்ட் செய்வது ஷரத்து 46 Cr. PC-யின் விதி முறைப்படிதான் கைது செய்யப்பட வேண்டும்.
2. கைது செய்கையில் அவன் உடலில் தேகப் பரிசோதனை செய்ய வேண்டும். அவன் உடலில் உள்ள காயம் போன்றவை குறிக்கப்பட்டு பின்னர் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.
3. அரஸ்ட் செய்யும் காலத்து கைதிக்கு காயம் ஏற்பட்டால் அதற்குண்டான காரணங்களை FIR –ல் காட்ட வேண்டும். அரஸ்ட் செய்வதற்கு முன்னுல் FIR பதிவு செய்யப்பட்டிருந்தால் வழக்கு நாட்குறிப்பில் குறிக்க வேண்டும்.
4. கைது செய்தவுடன் அவன் உடலில் உள்ள ஆயுதம், போதைப் பொருள், விஷம் போன்றவை இருந்தால் உடனே அவற்றை அதற்கென்று உள்ள வடிவத்தின் மூலம் நம்பத்தகுந்த, மதிக்கத்தக்க சாட்சிகளில் முன்னிலையில் கைப்பற்ற வேண்டும். அப்படி கைப்பற்றாவிடில் போலீஸ் அதிகாரி கைதியின் தாக்குதலுக்கோ (அ) அந்தக் கைதி தற்கொலை முயற்சியிலோ ஈடுபடுவார்.
5. அரஸ்ட் செய்யப்பட்டவன் எக்காரணத்தைக் கொண்டும் 24 மணி நேரத்திற்கு மேல் நீதிபதியின் முன் ஆஜர் படுத்தாமல் போலீஸ் காவலில் இருக்கக் கூடாது.
6. சிறப்பு அறிக்கை வழக்குகளில் (Special Report Cases) கைதி அரஸ்ட் செய்யப்பட்டால் சிறப்பு அறிக்கை வழங்கப்பட வேண்டும்.
7. கைதி வேறு மாநிலத்தில் கைது செய்யப்பட்டால் அங்குள்ள வட்டார நீதி மன்ற நடுவரின் முன் ஆஜர் செய்து பின்னர் மாற்றம் செய்து கொண்டு வர வேண்டும்.
8. அரஸ்ட் செய்த நேரம், தேதி, இடம் கைதியின் விலாசம், அங்க மச்ச அடையாளம், வயது ஆகியவை C.D. யில் குறிக்கப்பட வேண்டும்.
9. அரசியல் சாசனச் சட்டத்தின் குறிப்பிட்டுள்ளபடி அரஸ்ட் செய்யும் போது காரணத்தை அவரிடம் கூறவேண்டும்.
10. அரஸ்ட செய்யப்பட்டவுடன் தகவலை அந்தக் கைதியின் விலாசத்தில் உள்ள காவல் நிலையத்திற்குத் தெரிவித்து அதனை C.D. யில் எழுத வேண்டும்.
11. கைதி காவலோடு அழைத்து செல்லும்போது தப்பித்தால் (அ) வேறு ஏதாவது தற்கொலை போன்றவை நிகழ்ந்தால் அதற்கு அந்தக் காவல் அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.
12. கண்ணுல் பார்த்த சாட்சியங்களுக்கு முன்னிலையில் நீதிக்காவலில் இருக்கும் போது அடையாள அணிவகுப்பு நடத்தப்பட வேண்டும். அப்படிச் செய்ததை C.D. யில் குறிப்பிட வேண்டும்.

## 13. அவசர காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகள்
## (EMERGENCY RELIEF ASSISTANCE IN NATURAL CALAMITIES)

இயற்கையின் சீற்றம் திடீரென முன்னறிவிப்பு எதுவுமின்றி அடிக்கடி நிகழ்கிறது. இதனுல் புயல், பெருமழை, வெள்ளம் ஆகியவை உண்டாகி மக்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றன. அந்த நேரங்களில் காவலர்கள் போர்க்காலத்தில் பணிபுரிவதைப் போல பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். விபத்துகள் ஏற்படுகின்ற காலத்தில் காவலர்கள் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று அங்கு வசிக்கும் மக்களை, கால்நடைகளை முதலில் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்ப வேண்டும். விபத்தினுல் பாதிக்கப்பட்டு தொடர்பு கொள்ள இயலாத இடங்களுக்கு தொடர்பு கொள்ள ஆவன செய்ய வேண்டும். வெள்ளம் கட்டுக்கடங்காவிடில் அதனுடைய திசையினை பொது மக்களுக்கு மேற்கொண்டு தீங்கு விளைவிக்காது திருப்ப ஆவன செய்ய வேண்டும். சம்பந்தபட்ட அதிகாரிகளுக்குத் துணையாக இருக்க வேண்டும். மின்சாரத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு கம்பிகள் அறுந்து கிடக்குமிடங்களில் மக்கள் போகா வண்ணம் மின்சாரத்தைத் துண்டிக்க மின் வாரிய அதிகாரிகளுக்கு செய்தி அனுப்ப வேண்டும். வெள்ளம் போன்றவை வருவதற்கு முன்பாகவே பொதுப்பணித்துறையால் முன் அறிவிப்புக் கொடுக்கிற காலத்தில் ஆற்றின் கரையோரம் உள்ளவர்களை அனுப்ப அதிகாரிகளுக்கு உதவ வேண்டும். மேலும் கரையினைக் கண்ணுேக்கம் வைத்து உடைப்பு ஏற்பட்டால் உடன் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். புயல் பற்றிய முன்னறிவிப்பு கிடைக்கப் பெற்றதும் கடற்கரை ஓரங்களுக்கு பணிக்காக செல்லும் காவலர்கள் அங்குள்ளவர்களை புயல் பாதுகாப்பு இடத்திற்கு அனுப்ப வேண்டும். விபத்துகளில் காயமடையும் நபர்களுக்கு முதலுதவி அளிக்க உடன் மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும்.

## 14. தீ விபத்துக்களைத் தடுத்தலும்
## தீ பரவுதலைத் தடுத்தலும்

## FIRE PREVENTION AND FIRE FIGHTING

தீ விபத்து பொதுவாக காற்றடிக்கும் காலங்களிலும், வெயில் காலங்களிலும் அதிகமாக உண்டாகும். பொதுவாக தீ விபத்துகள் அஜாக்கிரதையினுல் உண்டாகும். அணைக்காத அடுப்புகள், அணைக்காமல் போடப்படும் பீடி, சிகரெட் துண்டுகள், மின்சாரக் கோளாறுகள் மற்றும் உணவுப்பண்டங்கள் தயாரிக்கும் இடங்களில் பயன்படுத்தப்படும் எண்ணெய்கள் அதிகம் சூடுபடுத்துதல் ஆகியவற்றின் மூலமாக தீப்பிடித்துக் கொள்ளும். எல்லா தீ விபத்துகளும் வழக்கமாகப் பதிவு செய்யப்பட்டு தீ விபத்தின் உண்மையான காரணம், உயிர் மற்றும் உடமைகளின் சேதங்களை மதிப்பிடவேண்டும்.

இத்தகைய தீ விபத்துகள் பெரும்பாலும் குடிசை வீடுகளில்தான் உண்டாகும். கிராமங்களில் வைக்கோல் போர்களிலும் மற்றும் தானியக்கிடங்குகளிலும் தீ விபத்து ஏற்பட வாய்ப்புண்டு.

தீ விபத்து ஏற்பட்ட இடத்திற்கு காவலர்கள் சென்றதும் தீயணைப்பு எந்திரம் வரும் வரையில் மேற்கொண்டு தீ பரவாமலும் தீயை அணைப்பதற்கு உள்ள ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பெட்ரோலியம், கெரோசின் மற்றும் எரியும்

தன்மையுடைய எண்ணெய்ப் பொருட்களில் தீப்பிடிக்கும் பொருளில் புகை தரும் தீயணைப்பான்களையேப் பயன்படுத்த வேண்டும். மற்ற சந்தர்ப்பங்களில் கார்பன்-டை- ஆச்சைடு தீயணைப்பான்கள், மணல் தண்ணீர் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

## 15. முதல் உதவியும் சுத்தம் மற்றும் சுகாதாரமும்
## FIRST AID/ SANITATION AND HYGIENE

### முதல் உதவியும் அதன் முக்கியத்துவமும்
(First-Aid and its importance)

ஒரு விபத்து அல்லது திடீரென நோய்வாய்ப்பட்டு அதன்மூலம் காயம் அடைந்து சுகவீனம் அடைபவருக்கு மருத்துவ சிகிச்சை கொடுப்பதற்கு முன்னல் பூர்வாங்கமாக கொடுக்கப்படும் சிகிச்சைக்கு ''முதலுதவி'' என்று பெயர்.

### 1. முதலுதவி :

அ, உயிரை உடலில் நிலை நிறுத்தவும் ;

ஆ விரைவில் குணமுறவும் ; மற்றும்

இ. நோயாளியின் நிலை மோசமடைவதைத் தடுக்கவும் அளிக்கப்டுகிறது. சிந்தித்து ஆனல் அதே நேரத்தில் விரைவில் செயல்பட வேண்டும். பரபரப்பு அடையாமல் சிந்தித்துச் செயலாற்றுகையில் நோய்க்குத் தகுந்த முதலுதவி அளிக்க வேண்டும்.

காவலர்கள் தங்களுடைய அன்றுடப் பணிகளைச் செய்யும்போது விபத்துகளால் காயம் அடைபவர்களையும், சுகவீனம் அடைபவர்களையும் சந்திக்க பல சூழ்நிலைகள் உண்டாகின்றன. ஏனவே அக்காலத்தில் கீழ்க்கண்ட வகையிலே முதலுதவி மேற்கொள்ள வேண்டும்.

### 2. காயங்கள் உண்டாகின்ற காலத்தில் (In burns) :

அ) மருத்துவ அதிகாரிக்கு உடன் தகவல் தெரிவிக்க வேண்டும்
ஆ) இரத்தப் போக்கை உடனடியாக நிறுத்த வேண்டும்
இ) காயமடைந்தவரை வசதியான முறையிலே அமர்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
ஈ) கூட்டத்தினரை விலக்கி இயற்கை சுவாசம் கிடைக்க வசதி செய்ய வேண்டும்.
உ) அசுத்தமான கைகளுடன் காயத்தைத் தொடக்கூடாது. காயத்தைத் தூய்மையான துணியைக் கொண்டு மூடி வைக்க வேண்டும்.

### 3. பாம்பு கடித்த காலத்தில் (**In snake bite**)

அ, மருத்துவ அதிகாரிக்கு உடனடியாகத் தகவல் கொடுத்து கடித்த பாம்பின் பெயர் தெரிந்தால் அதையும் தெரிவிக்க வேண்டும்.

ஆ. கடிவாய்க்கு மேலான கயிற்றல் இறுக்கி கட்டி இரத்தம் இதயத்திற்குச் செல்லாதவாறு பார்த்துக் கொள்வதுடன் கடிவாயில் கூர்மையான ஆயுதத்தால் கிழித்து விஷங்கலந்த ரத்தத்தை வெளியேற்ற வேண்டும்.

### 4. விஷமருந்திய காலத்தில் (**In poisoning cases**)

அ. உதடு மற்றும் வாயின் உட்பகுதியில் கறை இருக்கிறதா என பார்க்க வேண்டும்.

ஆ. கறைகள் இருந்தால் விஷமருந்திய நபருக்கு நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் அல்லது முட்டை கொடுத்து வெளியேற்ற வேண்டும்.

இ) கறைகள் இல்லாவிடில் விஷமருந்திய நபரை வாந்தியெடுக்கச் செய்ய வேண்டும்.

ஈ) வாந்தி எடுக்க முடியாவிடில் இரண்டு கரண்டி உப்பினைக் தண்ணீரில் கலந்து உட்கொள்ளச் செய்ய வேண்டும்

உ) விஷமருந்திய நபர் தூக்க கலக்கதிலிருந்தால் அவரை தூங்கவிடாது நடக்கச்செய்து சூடான டீ, காப்பி கொடுக்க வேண்டும்.

ஊ) மூச்சு நின்று போனல் செயற்கை சுவாசம் கொடுக்க வேண்டும்.

### 5. நீரில் மூழ்கிய காலத்தில் (**In drowning cases**) :

அ) நீரில் மூழ்கிய நபரை நீரை விட்டு வெளியிலெடுத்து அவருடைய உடைகளைத் தளர்த்தி வாய்ப்பகுதியை சுத்தம் செய்ய வேண்டும்.

ஆ) அவரை மல்லாக்கப் படுக்க வைத்து கைகளை மேலே தூக்கிய நிலையில் வைத்து செயற்கை முறையில் சுவாசம் உண்டாக்க வேண்டும்.

### 6. தூக்கு போட்ட காலத்தில் (**In hanging cases**) :

அ. உடலைத் தொட்டுப் பார்த்து உடனடியாக கால்களை மேலே உயர்த்தி முடிச்சிற்கு மேலாக கையிற்றை அறுத்து உடம்பினைக் கீழே கிடத்த வேண்டும்

ஆ. உடைகளைத் தளர்த்த வேண்டும்.

இ, செயற்கை முறையில் சுவாசம் உண்டாக்க வேண்டும்.

### 7.தீப்பிடித்த காலத்தில் ஆற்றவேண்டிய நிவாரணம் பணிபுரியும் முதலுதவியும் (**Out break of fire rescue work and first –aid work**) :

தீக்காயங்களுக்குச் செய்ய வேண்டிய முதலுதவி **:-**

அ. தீப்புண்ணில் நீர் படாமலும், இதர மண் போன்ற பொருட்கள் படாமலும் பாதுகாக்க வேண்டும்.

ஆ. வாழைப்பட்டையிலிருந்து எடுக்கப்படும் சாறு, தேங்காய் எண்ணெய் ஆகியவற்றில் ஒன்றைக் காயத்தின்மீது தடவவேண்டும்.

இ. காயங்களின் மீது ஈ மொய்க்காமல் சல்லாத்துணி போட்டு போத்த வேண்டும்.

ஈ. உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

## 8. மின்சார அதிர்ச்சியில் தாக்கப்பட்டவருக்குச் செய்ய வேண்டிய முதலுதவி (Electrocution method of first – aid) :

அ. மின்சார அதிர்ச்சியால் தாக்குண்ட நபரை முதலாவதாக மின் அதிர்ச்சியிலிருந்து விடுவிக்க வேண்டும்.

ஆ. சுவாசிப்பதற்காக, சுத்தமான காற்று கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இ. சுவாசமில்லாவிடில், செயற்கை முறையில் சுவாசம் உண்டாக்க வேண்டும்.

ஈ. தீக்காயங்களிருந்தால் அதற்கு சிகிச்சை செய்ய வேண்டும்.

உ. அருகிலுள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

### துப்புரவு

நம்மையும் நம்மைச் சார்ந்த இடங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்வதே துப்புரவு என்கிறோம்.

பழங்காலத்தில் துப்புரவு பற்றி மூதாதையர்கள் “ கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக்குடி” என்று கூறி சுத்தத்தைப் பற்றி தொன்மை காலத்தில் வர்ணித்துள்ளார்கள். எனவே நாம் தினமும் குளித்தும், ஆடைகளை சுத்தமாக வைத்தும், தங்கும் இடத்தையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாகவும் அசுத்தம் செய்யாமலும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு சுகாதாரமாக இல்லாவிட்டால் நம்மை நாமே பிணிக்கு உள்ளாக்கி கொள்கிறோம். நாம் துப்புரவுடன் சுத்தமாக இருக்கும்போது நம்மிடம் எந்த நோயும் வராது.

*****